ஒளி : 03 கதிர் : 02 2024 ஏப்ரல் – ஜூன்

# அவரி 10

கலை இலக்கிய முத்திங்கள் இதழ்




350/-

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான Sri Lanka Pen Club வெளியீடு

Since - 2020

# U.N.R

# HOTEL & BAKERY

## Day & Night Service




FAMILIY ROOM

24H SERVICE

**Puwakpitiya Junction,Galewela**

**TEL : 0778 966 674 / 0761 604 423**

# அவரி 10

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான SRI LANKA PEN CLUB
முத்திங்கள் வெளியீடு

ஒளி - 3 கதிர் - 2 ஏப்ரல் - ஜூன் 2024

## அவரி 10 ஆசிரியர் குழு

**நிர்வாக ஆசிரியர்**
சம்மாந்துறை மஷூறா.

**இதழாசிரியர்.**
அஸ்மா தீன்.கம்பளை.

**சஞ்சிகை செயற்குழு.**

ஷாமென் நிஸாம்டீன்
கட்டுகஸ்தோட்டை.

என்.எம்.ஆரிபா.ஏறாவூர்.

லைலா அக்ஷியா.
மொரட்டுவ.

ஜலீலா முஸம்மில்.
ஏறாவூர்.

வஃபீரா வஃபி. கொழும்பு.

அறபா மன்சூர். கண்டி.

எம்.பி.பர்சானா.
நிந்தவூர்.

சுஸானா முனாஸ்.
மூதூர்.

முப்லிஹா பிர்தௌஸ்.
காத்தான்குடி.

பாரா தாஹிர்.
மாவனெல்ல.

மர்ளியா சக்காப்.
திருகோணமலை.

ஹகீமா அமீனுதீன்.
ஓட்டமாவடி.

மஹ்ஸா பானு ஜஸூர்.
சம்மாந்துறை.

மிஸ்ரியா அமீன்.
கிண்ணியா.

ஜெஸீனா நிஸ்றீன்.
சாய்ந்தமருது.

லறீபா பதுர்தீன்.
கலேவல.

நௌஷா ஜமால்தீன்.
சம்மாந்துறை.

றம்ஸானா ஸமீல்.
அக்கரைப்பற்று.

பானு ஜிப்ரி.
சாய்ந்தமருது.

**நிர்வாக அலுவலகம்**
**மஷூறா மஹால்,**
**4/C/5/லேக் வீதி,**
**மருதமுனை 4**

**0765363434 / 0770696559 / 0672261044**

**ISSN: 2961-5194**

## தூரநோக்கு

கலாசாரத்தினூடாக கலையிலக்கியங்களைக் கட்டியெழுப்புவதும், ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்.

## நோக்கக் கூற்று

முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் களங்கள் அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்.

# Sri Lanka Pen Club கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்.
Sri Lanka pen club ///

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா...
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி...

கலைகளும் செய்வோம்
சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு...
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்...

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை...
கலாசார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்...

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்..
சிதைத்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்...!!!

**பாடலாக்கம்**
**சம்மாந்துறை மஷூறா**
||

# நிர்வாக ஆசிரியர் உங்களோடு...



அஸ்ஸலாமு அலைக்கும்.

பத்தாவது பிரசவத்தில் உங்களை சந்திப்பதையிட்டு மிகுந்த புளகாங்கிதம்.இது மூன்று மாதங்கள் மட்டும் சுமக்கும் பிரசவம்.இந்த பத்தாவது குழந்தையின் தாய் கம்பளை அஸ்மா தீன்.

அஸ்மாவைப்போல அவரது உள்ளமும் அழகு.நடத்தைகளும் அழகு.(படைப்புக்) குழந்தைகளும் அழகு.எமது SLPC யில் இணைந்ததிலிருந்து அவரது நிதானமான ஒவ்வொரு ஆக்க நகர்வுகளிலும் நேர்த்தியைக் கண்டிருக்கிறேன்.சிறந்த சிறுகதை எழுத்தாளர்.இவர் கவிதைகளிலும் சிறந்த சொல் வீச்சுக்களிருக்கும்.

1984 லிருந்து இலங்கை இலக்கியப் பரப்பிற்குள் பிரவேசித்தவர்.வானொலி முஸ்லிம் சேவையிலும் இவரது நாடகங்கள் பல ஒலிபரப்பாகியுள்ளன.

சிறந்த படைப்பாளியான இவர் அடுத்தவரைப் புண்படுத்தாத சொற்களுக்கும் அடுத்தவரைப் பாராட்டும் சொற்களுக்கும் சொந்தக்காறி.சஞ்சிகை உருவாக்கம் இவருக்கு புதிய அனுபவமாயினும் இவரது நிதானமும் தேடலும் அனுசரிப்பும் சிறந்த பேற்றைத் தருமென்பதில் ஐயமில்லை.

அவரி எமது உறுப்பினர்களுக்கு களம் கொடுக்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டது.அவற்றில் வெற்றியும் கண்டுள்ளது.ஆயினும் இனிவரும் வெளியீடுகளில் SLPC க்கு வெளியிலுள்ள படைப்பாளிகளின் ஆக்கங்களையும் இணைத்துக் கொள்ளவிருக்கிறோம்.

ஒரு சஞ்சிகையின் உருவாக்கத்தின் பின் சொல்ல முடியாத பல பிரயத்தனங்களிருக்கின்றன.ஒவ்வொரு சஞ்சிகைகளிலும் தனது ஆக்கங்கள் வெளிவந்தால்கூட பிரதிகள் வாங்கிக் கொள்ளாதவர்களுமுண்டு.

யாரிடமேனும் தனது ஆக்கத்தின் பிரதியை பெற்றுக் கொள்ளும் சாமானியர்களும் பலருண்டு.இவையெல்லாம் ஒன்றும் பெரிய சாதனைகளல்ல.ஆதரவு தராமல் அடைவில் பங்காளிகளாக இருக்க ஆசைப்படும் குறுகிய மனப்பான்மை.அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

**இலக்கிய வித்தகர்**

**சம்மாந்துறை மஷூறா.**

**நிர்வாக ஆசிரியர்.அவரி**

# அவரி ஆசிரியர் அகத்தில் இருந்து....



அஸ்ஸலாமு அலைக்கும்.

நாம் நினைக்காத விதத்தில் எம்மை படைத்து எமக்காக உலகத்தில் அனைத்தும் அடக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்!

அவரி 10 சஞ்சிகையின் ஆசிரியராய்
எடுத்த பணி முடித்து விட்டு எழுந்தப் போது என்னுள் எழுந்த உணர்வுகள்.....
இலட்சிய பாதையில் இலக்கிய பயணத்தில் கடந்து வந்து நடந்த பேனா
வடித்து விட்டு சென்றதெல்லாம் பல இலக்கிய வடிவங்கள்.
ஆனால் ஒரு சஞ்சிகை ஆசிரியராய் சந்தித்த நிகழ்விதிலே , முந்திக்கொண்டு முதல் நன்றி சொல்லவேண்டியது எம் ஆற்றல் உடைய பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர் வித்தகர் மஷூறா சுஹூறுத்தீன் அவர்களுக்குத்தான்.

பெண்களின் படைப்பிலக்கியத்திற்கான களமான அவரி ஒவ்வொரு சஞ்சிகைக்கும் ஒவ்வொருவரையும் ஆசிரியராக அமைத்து அனுபவம் பெற வைக்கும் செயல் சாலச் சிறந்தது.

ஆற்றல் உடைய பெண்கள் அமைப்பின் ஸ்தாபகத் தலைவியான அவரி சஞ்சிகை நிர்வாக ஆசிரியர் திருமதி மஷூறா சுஹூறுத்தீன் அவர்களுடைய வழிகாட்டலிலும் ஆலோசனையிலும் உருவாக்கம் பெற்ற இச்சஞ்சிகைக்கு ஆக்கம் படைத்தோர் ஊக்கமளித்தோர் விளம்பரங்கள் அளித்தோர் அனைவரையும் விளித்து ,விரித்த கண்களின் தூக்கம் தொலைத்து உங்கள் முன் கொண்டு வந்தேன் ; பத்தாவது அவரி.

அவரிக்காய் முன் பணிப்புரிந்தோர் என் பணியுடன் இன்ஷா அல்லாஹ் இனி பின் வரும் சஞ்சிகைகளுக்காய் பணிபுரியவிருப்போர்(அவரி ஆசிரியர்கள்) அனைவர் பணியும் சிறக்க வேண்டும்.

ஆற்றல் உடைய எம் S.L.P.C என்றும் மிளிர வேண்டும்.

ஏவலும் விலக்கலும் ஏவிய ஏக இறைவனை ஏகியே கேட்கிறேன்.
பொருத்தமாய் எம் பணி தொடர்வோர் தொடர்ந்தும் புரிய அருள் புரிவாயாக!

**திருமதி அஸ்மா தீன்**

# படைப்புகள்

இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பாரம்பரியங்கள்(கட்டுரை) - அரபா மன்சூர். .6

வெளிச்சமில்லாத விடியல்கள்(சிறுகதை)- நுஸ்ரத் அமானா ...............................9

புறப்படு பெண்ணே!(கவிதை) - றம்ஸானா சமீல்.....................................................15

உலகம் முழுவதும் எங்கள் கதைகள் (திறனாய்வு) - ஏ.பீர்முகம்மது ..................16

அன்பின் வலயம்(கவிதை) - மர்ளியா சக்காப் .........................................................20

கோடைகால பிரச்சினைகளும் தீர்வுகளும்(கட்டுரை)–DR. ஜலீலா முஸம்மில்.21

கேடயம்.( அலசல் சமூக சித்திரம்)- ஜெஸ்மின் ரமீஸ் ...............................................26

வெண் புறாக்களைத் தேடி(கவிதை)- பானு ஜிப்ரி.....................................................29

எங்கள் ஊர்(கவிதை)- ID தஸ்னீம்.........................................................................29

எமது ஆளுமை(நேர்காணல்)- ஷாமென் நிஸாம்டீன்...............................................30

வகுப்பறைக்கு வெளியே(கட்டுரை)- எஸ். ஃபாயிஸா அலி.. ...................................35

கொடிக்குத் திரும்பாத மலர் (சிறுகதை)- சித்தி மிஸ்ரியா அமீன்......................37

எங்கள் ஊர்(கவிதை)- பஸ்லா பர்ஸான் ...................................................................42

இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு (கட்டுரை)- ஹாஜறா கலீலுர் ரஹ்மான் ........43

பெண்ணின் பெருமை. (கவிதை)- இம்திஸாஹஸன் ...............................................47

தேனீ வளர்ப்பு/ Bee keeping /Apiculture (கட்டுரை) - எம்.எச்.முர்ஷிதா ஷிரீன்..........48

மொழிபெயர்ப்பு கவிதை.- DR.மரீனா இலியாஸ் ஷாஃபி........................................52

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பாரம்பரியங்கள்



காலத்தின் கண்ணாடியாகக் கருதப்படும் இலக்கியங்கள் கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களை எடுத்துக் காட்டுவதில் இஸ்லாமித் தமிழ் இலக்கிய வடிவங்கள் பெரும் பங்காற்றியுள்ளன.

இன்றைய இளம் சந்ததியினருக்கு அவை எட்டாக்கனிகளாகவும், இலைமறை காய்களாகவும் இருப்பது கசப்பான உண்மையாகும். இஸ்லாமிய கலாசார கலை இலக்கியப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள், சிறப்பான வரலாற்றைக் கொண்டவைகளாகும். அவை இன்று வழக்கொழிந்து வருவது கண்கூடு.

பழங்காலத்தில் நமது சமுதாயத்தினரை சமயத்தின்பால் ஆற்றுப்படுத்தவும், பொழுதுபோக்காகவும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் படைக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது. மார்க்கத்தை மக்கள் மனதில் பதியச் செய்வதற்காக உள்ளதை உள்ளவாறு சொல்லியும், பல கற்பனைப் புனைந்துரைகளாலும் மக்கள் மனங்களை இலக்கியங்களால் நிரப்பினர். இஸ்லாமித் தமிழ் இலக்கிய பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பல தமிழ் சமூகபிரதிபலிப்புகளாக விளங்கியுள்ளன.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை மரபிலக்கியம், புதுஇலக்கியம் என இரண்டுவகையாக நோக்கலாம். மரபிலக்கியவகையில், காப்பியம், சிற்றிலக்கியம், ஞானப்பாடல், பொதுமக்கள் சார்பிலக்கியம் என்பன அடங்கப்பெறுகின்றன.

புதுஇலக்கியங்களாக, படைப்போர், முனாஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா என்பன குறிப்பிடப்படுகின்றன.

வாழ்க்கையை கலை உருவாக்கிக் காட்டுகின்ற காப்பியமானது, அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றைக் கொண்டு பாட்டுடைத் தலைவனையும் கொண்டதாக இஸ்லாமியக் காப்பியம் விளங்குகின்றது.

இஸ்லாமியப் பண்பாடு சிதைவுறாவண்ணம் பல முஸ்லிம் புலவர்கள் இஸ்லாமிய இலக்கியங்கள் பலவற்றை படைத்துள்ளனர். இலக்கியப் பண்பையும், பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துச் சொல்லும் பல்சந்தமாலை, யாகோபு சித்தர் பாடல், 1572 இல் வண்ணப்பரிமளப் புலவரால் இயற்றப்பட்ட ஆயிரம் மஸ்அலா என்ற வினாவிடை இலக்கியம், நூறு மஸாலா என்பனவற்றையும் குறிப்பிடலாம்.

உமறுப் புலவரின் சீறாப்புராணம் உன்னத இஸ்லாமியத் தமிழ் காப்பியமாகக் கருதப்படுகின்றது. காப்பிய இலக்கியங்கள் அனைத்துமே ஒருங்கே அமையப்பெற்ற முதல்நிலைக் காப்பியமாக சீறாப்புராணம் திகழ்கின்றது. இது விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என முப்பெரும் காண்டங்களைக் கொண்டது.

நபிகள் பெருமானாரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. பெருமானாரின் பிறப்பு, நபித்துவம், அவரது புலப் பெயர்வு என அனைத்தையும் உள்ளிட்ட ஒரு காப்பியமாக விளங்குகின்றது. இதன் இறுதிப் பகுதி முழுமையடைவதற்கு முன்னரே உமறுப் புலவர் மரணமடைந்துவிட்டார்.

இதற்குப் பின்னர், காயல்பட்டணம் பனீ அஹமது மரைக்காயர் புலவரால் சின்ன சீறா பாடப்பட்டது. சின்ன சீறாவானது உமறுப் புலவர் விட்ட இடத்திலிருந்து, நபி (ஸல்) அவர்களது வரலாற்றை தொடர்ந்து கூறும் செய்யுள் நூலாகும்.

நபிகளாரின் விண்ணுலகப் பயணத்தை விபரிக்கும் மிஹ்ராஜ் மாலை கி.பி 1589 ஆம் ஆண்டு ஆலிம் புலவரால் இயற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பீர்முஹம்மதுப் புலவர் இஸ்லாமிய நீதிமுறைகளை நான்கு படலங்களில் 2226 செய்யுட்கள் கொண்ட திருநெறி நீதம் என்ற இலக்கியத்தைப் படைத்துள்ளார். இதிலே இறைவாழ்த்து, இறைநேசச் செல்வர்களது புகழ், என்பன கேள்வி பதில் அமைப்பிலும்கூட அமைந்துள்ளன.

மேலும் இப்ராஹிம் நபி (அலை) அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, திருமணிமாலை என்ற காப்பியமும், நபி சுலைமான் (அலை) அவர்களை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இராஜநாயகம் என்ற காப்பியமும் ஏர்வாடி செய்யது இபுறாஹிம் வலி என்ற மூன்று காப்பியங்களையும் தீன்பாட்டு விளக்கம், அலிபாதுஷா நாடகம் என்பவற்றையும் வண்ணக் களஞ்சியப் புலவர் என்று வர்ணிக்கப்பட்ட ஹமீது இப்றாஹிம் செய்யதுப் புலவர் இயற்றியுள்ளார். புலவர் நாயகம், புதுகுஷ்ஷாம் முதலான காப்பியங்களை குலாம் காதிறு நாவலர் இயற்றியுள்ளார். தீரன் திப்பு சுல்தான் காவியம், மஹ்ஜபீன் காவியம் என்பவற்றை எழுதியுள்ள ஈழத்துக் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீனும் குறிப்பிடக்கூடியவர்.

முதலில் செய்யுள் நடைக் காப்பியம் பாடியவர் காயல்பட்டிணம் மகாவித்துவான் செய்கு அப்துல் காதிர் நெய்னாலெப்பை ஆலிம் புலவர்.

முஸ்லிம்கள் சிரியாவை வெற்றி கொண்டதை அடிப்படையாக வைத்து எழுந்த காப்பியமாக புதுகுஷ்ஷாம் காணப்படுகின்றது. இதில் முஹம்மதியா காண்டம், சித்தீக்கியா காண்டம், பாரூக்கியா காண்டம் என்ற முப்பெரும் காண்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமியர்களின் தனித்துவமான இலக்கியப் படைப்புகளில் ஒன்றான படைப்போர், முஸ்லிம்களுக்கே உரிய பிரபந்தமாக காணப்படுகின்றது. இவ் படைப்போர் இலக்கியங்களுள் முஹிதீன் புலவரால் இயற்றப்பட்ட சக்கூன் படைப்போர் முதலாவது படைப்போர் இலக்கியமாக கொள்ளப்படுகிறது.

தமிழில் பரணி இலக்கியங்களுக்கு இணையாக படைப்போர் இலக்கியங்கள் திகழ்கின்றன. சக்கூன் என்ற எதிரிப்படை தலைவனின் பெயரே இவ் நூலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

சையிதத்துப் படைப்போர், இரசுல்கூல் படைப்போர், காஸிம் படைப்போர், உசைன் படைப்போர், இபினியன் படைப்போர், உச்சி படைப்போர், தாக்கிப் படைப்போர்,நபுசுப் படைப்போர், மலுக்கு முலுக்குப் படைப்போர், சூறாவளிப் படைப்போர் முதலான இலக்கியங்களை இஸ்லாமியர்கள் ஆக்கியளித்துள்ளனர்.

தமிழ் சிற்றிலக்கியங்களில் மாலை இலக்கியங்கள் தனித்துவம் வாய்ந்த இலக்கிய வகையின போலவே, இஸ்லாமிய இலக்கியத்திலும் மாலை இலக்கியங்கள் தனித்துவம் வாய்ந்தனவாக காணப்படுகின்றன.

இதில் உமறுப் புலவர் எழுதியதாக கருதப்படும், முதுமொழி மாலை முதலாவது மாலை இலக்கியமாகும். நபி (ஸல்) அவர்களது விண்ணுலக யாத்திரையை கருவாகக் கொண்டு ஆலிம் புலவர் எழுதிய மிஹ்ராஜ்மாலை, முஹியித்தீன் ஆண்டகை புகழ் பாடும் முஹியித்தீன் மாலை, பத்ர் யுத்தத்தையும் பத்ர் ஸகாபாக்களையும் புகழ்ந்து பாடும் பத்ர் மாலை, பெண்களுக்கு அறிவுரை பகரும் பெண்புத்தி மாலை மாலை இலக்கியங்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தோடு தமிழில் காணப்படும் எல்லா வகையான சிற்றிலக்கிய

வடிவங்களையும் பயன்படுத்தி முஸ்லிம் புலவர்களும் தமது இலக்கியப் படைப்புகளை வெளிப்படுத்தியது போல புதிய இலக்கிய வடிவங்களையம் ஆக்கி அளித்துள்ளனர்.மஸ்அலாவில் ஆயிரம் மஸ்அலா, நூறுமஸாலா,வெள்ளாட்டி மஸாலா, யூஸ{ப் நபி கிஸ்ஸா, ஸைத்தூன் கிஸ்ஸா, ஐயூப் நபி கிஸ்ஸா,நச்சியார் கிஸ்ஸா, தமீமுல் அன்ஸாரி கிஸ்ஸா, விறகுவெட்டியார் கிஸ்ஸா, கபன் கள்ளன் கிஸ்ஸா முதலான கிஸ்ஸா இலக்கியங்களையும் படைத்தளித்துள்ளனர்.

இஸ்லாமிய இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியமானது பரந்த பொருளையும், விரிந்த கருத்தையும் கொண்டதாகும்.

இஸ்லாம் எங்கள் வழி

இன்பத்தமிழ் எங்கள் மொழி

இலக்கியம் எங்கள் விழி!!!

**கலாபூஷணம்**

**அரபா மன்சூர்.**



# சிறுகதை

## வெளிச்சமில்லாத விடியல்கள்

"இந்த நதீரா ஆண்டிக்கி பைத்தியம் புடிச்சிட்டு போல.எந்த வயசுல என்ன பேசுறதுண்டு ஒரு விதிவிலக்கு இல்லையா.நினைக்கவே அருவெறுப்பா இருக்கு.சீ...."..நதீரா பேசியதை நினைக்கும் போதெல்லாம் மனதிற்குள் ஏசிக்கொண்டாள் சதா.

"மகள் நீங்க நல்ல பக்குவமான புள்ள.நான் சொல்றத யோசிச்சி பாருங்க.என்ட ஹஸ்பன்ட நண்பர் ஒராள் இருக்காரு.அவருக்கு வயசு நாப்பதாவது.லெக்சரா இருக்காரு. தங்கச்சி, ராத்தாமார் கூட என்டதால அவர் கல்யாணம் தள்ளிப்போயிட்டு.அல்லாஹ்ட நாட்டமும் அதான் போல.இப்ப அவர்ட எல்லாக் கடமையையும் முடிச்சிட்டாரு.நான் இஷானா பத்தி சொன்னதும் அவருக்கும் புடிச்சிட்டு.அவர்ட லட்சியம் விதவைக்கி வாழ்க்கை குடுக்கிறது என்டதால யாரும் தலையிடல்ல.அவர் வீட்டையும் சரி என்டு சொன்னாங்க.நீதான் உன்ட உம்மாட்ட பேசி நல்ல முடிவா சொல்லனும் மகள்."

"ஆண்டி.....இந்த விஷயம் உம்மாக்கு தெரியுமா?"

"நான் அவள்ட்ட பேசினன்.உன்னை பத்திதான் யோசிச்சா.அதைத் தவிர அவளுக்கு வேற ஒரு பிரச்சினையுமில்ல".

"அவங்க சரியாத்தான் யோசிக்காங்க.இது நடந்தா என்ட ஹஸ்பன்ட்,அவர்ட குடும்பம்,என் ஃப்ரென்ட்ஸ் எல்லாம் என்ன நினைப்பாங்க.என்ட வாழ்க்கைக்கே பிரச்சினையாகும்.மருமகன் எடுத்து பேரப்புள்ள கண்ட வயசுல என்ன பேச்சு இதெல்லாம்"

"நீங்க எல்லாரும் துபாய் போறீங்களே மகள்.அவள்ட்ட யாரு இருக்கா?இஷானாட இழப்பு உனக்குத் தெரியாதா?.அவளும் வாழட்டுமே சதா.மகளா யோசிக்காத.ஒரு பொம்புளயா யோசி.அவள் கிழவி இல்ல.கல்யாணம் முடிச்சவ தானே நீங்க.விளங்காதா?"

"ஆண்டி...உங்கள்ட்ட இந்த மாதிரி பேச்சை எதிர்பார்க்கல்ல.நீங்க உம்மாட கூட்டாளிதான்.எங்கள்க்கு உதவியெல்லாம் செஞ்சிருக்கீங்க தான்.அதெல்லாம் நான் மறக்கமாட்டன்.ஆனா இனி இப்டி ஊத்த கதையெல்லாம் பேச எனக்கு கோல் எடுக்க வேணாம்.சரியா கோபம் வருது.நான் வைக்கிறன்"

நதீரா பேசியது அடிக்கடி சதாவுக்கு நினைவில் வந்துகொண்டிருந்தது.

"என்ன சதா யோசனை? புள்ளக்கி கிழங்கு அவிச்சி வைச்சிருக்கன்.அவன் எழும்பினதும் குடுக்கலாம்.இன்னும் ஹஸன் குட்டி எழும்பல்லியா"என பேரனை விசாரித்த இஷானாவை கோபமாக இடைமறித்தாள் சதா."உம்மா.....இந்த நதீரா ஆண்டி கோல் எடுத்தா பேசாதீங்க.எடுக்கவே வேண்டாம்.அவங்களுக்கு வயசுக்கு ஏத்த பக்குவமே இல்ல."முகத்தை அசிங்கத்தைக்கண்டது போல் சுருக்கினாள் சதா.



இஷானா என்ன எது என்று விசாரிக்கவில்லை.காரணம் அவள் அறிந்ததே. நதீரா சதாவிடம் சொல்லியிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டாள்.தாயின் அமைதி சதாவை இன்னும் கோபப்படுத்த, "ம்மா.....புள்ள எழும்பினா பெம்பஸ் மாத்திடுங்க.நான் குளிச்சிட்டு வாரன்.சரியா வியர்க்குது.முதல்ல உங்கட ஃபோன சைலன்ட்ல போடுங்க.இல்லாட்டி ஓஃப் பண்ணுங்க.யாரும் எடுத்தா அவன் எழுபிறப்போறான்."என்று கடுகடுத்தவள் குளியலறைக்குச் சென்றுவிட்டாள்.

பெருமூச்சுடன் திரும்பிய இஷானா,எதேர்ச்சையாக கண்ணாடியில் தன் உருவத்தைப்பார்த்தாள். நீண்ட நாட்களுக்குப்பிறகு,தன்னை நிதானமாகப்பார்த்தாள்.நரைகூட விழாத கருங்கூந்தல்,மைபூசாத கருவிழிகள்,ஒப்பனை துளியுமில்லாத மாசுமருவற்ற முகம் அழகாக இருந்தாள்.தஹஜ்ஜத் தொடந்து தொழுதா முகம் இளமையா இருக்கும்.ஒன்பதாம் வகுப்பில் அவளது இஸ்லாம் பாட டீச்சர் சொன்னது நினைவுக்கு வந்தது.பதினாறு வயதில் அனாதையான இஷானாவை பராமரிக்க யாருமில்லை.அவளது மாமிதான் வேண்டாமென்று அழுதவளைப்பிடித்து திருமணம் செய்து வைத்தார்.பெரிய படிப்பெல்லாம் படிக்க வேண்டுமென்ற அவள் கனவு அத்துடன் முடித்துவைக்கப்பட்டது.திருமணத்தைப் பற்றி புரிதலே இல்லாத வயதில் ஒரு குழந்தைக்கு தாயுமானாள் இஷானா.அப்போது அவளுக்கு வெறும் பதினேழு.வீட்டுவேலை,பிள்ளையின் அழுகை,புதிதாக கற்றுக்கொண்ட சமையல் எரிகாயங்கள், என பம்பரமாகிப்போனது அவள் வாழ்க்கை.பதினெட்டாவது வயதில் கணவனின் இறப்பு செய்தியும் சேர பதினொருமாதக் குழந்தைக்கு தந்தையுமாகிப்போனாள் இஷானா.இடியாப்பம் சுட்டு விற்றாள்.சமைத்து கொடுத்தாள்.உடுப்புத் தைத்தாள் மூன்று வேளை சாப்பாட்டிற்காக கடுமையாக உழைத்தாள்.மனதளவில் அவள் பட்ட வேதனைகள் அவள் மட்டுமே அறிவாள்.இனிமையே இல்லாத வாழ்க்கையில் அவளது இளமையும் தவிப்புகளும் வீணாகிப்போனது.

அவளது சக தோழிகள் கணவனுடன் பைக்கிலோ காரிலோ செல்லும் போதெல்லாம் புன்னகையோடு கடந்துவிடுபவளது ஆழ்மனதின் ஓலம் யாருக்கும் தெரியாதே.”இருக்கிற பொம்பளப் புள்ள.இன்னொரு கல்யாணம் செய்தா வாரவன் நல்லா பார்ப்பானா” .ஆறுதல் என்னும் பேரில் அனைவரும் அவளைப் பார்த்துக் கேட்கும் ஒரே கேள்வி இதுதான்.அதையே தீர்ப்பாகவும் சொன்னார்கள்.

இதுவரைக்கும் யாருமே அவள் மனதைப்பற்றி சிந்தித்ததில்லை.மகள் சதா உட்பட.பதினேழு வயது தொடங்கி முப்பத்தியேழு வயது வரைக்கும் அவள் சந்தித்ததெல்லாம் ஏமாற்றங்களையும் சுயநலம்கொண்ட மனிதர்களையும் தான்.அவளுக்கும் ஆசைகள் கனவுகள் இருக்குமென்று யாரும் நினைப்பதேயில்லை.ஆனால் அவளது மறுமணத்தை பற்றிப் பேசும் ஒரே தோழி நதீராவைத்தவிர.

வழமைபோல அன்று தஹஜ்ஜத் தொழுது குர்ஆன் ஓதிக்கொண்டிருந்தாள் இஷானா.

இரண்டு நாட்களாக நதீராவின் அழைப்பு இஷானாவிற்கு வந்துகொண்டே இருந்தது.ஆனால் சதா இருக்கும் போது பேசமுடியாதென்பதால் எடுக்கமாட்டாள்.இப்போது சதா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.அவள் அழைப்பு தொடர்ச்சியாக வர "ஹலோ....சொல்லுடி.சரியான வேலை நதீரா.சதாவும் போறாளே.அவளுக்கு பார்க்க வேண்டிய வேலை நிறைய இருக்கு ,ஹஸன் குட்டிட வேலை ஒருபக்கம்" என அவள் சமாளிக்க நதீராவோ அதைக் கண்டுக்கவேயில்லை."இஷானா… உன்ட மகளுக்கு ஒன்டும் விளங்காதுடி.இந்த

சமூகம் எதுல முன்னேறினாலும் பெண்கள்ட விஷயத்துல மட்டும் முன்னேறா.அதுக்காக நாம யாருக்கும் அடிமைப்படத் தேவல்ல..அல்லாஹ் அனுமதிச்சத கொச்சைப்படுத்துற அதிகாரம் யாருக்குமில்ல இஷானா.சதாவுக்காக வாழ்ந்துட்டாய்.அவளும் வெளிநாடு போகப்போறா.இனி உனக்காக வாழு.உன்ட சம்மதம் இருந்தா சரி.மத்ததை நான் பாக்குறன்."மூச்சு வாங்கப் பேசினாள் நதீரா.

நதீராவின் துணிச்சலான பேச்சு இஷானாவிற்கு தன்மீது கழிவிரக்கத்தை ஏற்படுத்தியது."இஷானா அதிகம் யோசிக்காதடி.நான் வார மாசம் இரண்டாம் தேதி அப்டி ஊருக்கு வாரன்.நான் எல்லார்ட்டயும் பேசுறன்.நீ பேசாமடந்தையாவே இரு.அத சொல்லத்தான் எடுத்த.வைக்கிறன்" .

"இல்லடி⋯நான்,ஹலோ...ஹலோ" என இஷானா அழைக்க நதீரா வைத்தும் விட்டாள். என்ன பிரச்சினை இது என பதட்டமானாலும் இஷானாவுக்கு அதைப்பற்றி யோசிக்க நேரமின்றி வேலை இழுத்துக்கொண்டது.அவளது வாழ்க்கையே இயந்திரம் தான்.சிலநேரம் அதுகூட மின்சாரம் இல்லாத சமயங்களில் நின்றுவிடுவதுண்டு.ஆனால் அவளுக்கு அப்படி எந்த கொடுப்பனவும் இல்லை.வேலை வேலை வேலை.முப்பத்தியேழு வருட வாழ்க்கையில் அவள் அன்னையின் கைகளில் இருந்த போது மட்டும் தான் நிம்மதியாக வாழ்ந்திருப்பாள்.மற்றபடி அவள் வாழ்க்கையில் நினைத்தோ சொல்லியோ ரசிக்கும்படியாக எதுவுமில்லை.

"ஏன்டா குட்டி....ஏன் அழுற?? சாப்பிடுங்க.ஆஆஆ....தங்க குட்டி" என தன் ஒன்பதுமாத பேரக்குழந்தையின் கன்னத்தில் முத்தம்வைத்தாள் இஷானா.

"உம்மா....நீங்க இல்லாம இவன தனியா எப்படித்தான் சமாளிக்கப்போறனோ.எல்லாத்துக்கும் உங்கள்ட்டேயே பழகிட்டான்.எப்பவும் மமாம்மா தான் வேணும்.இவனையும் பாத்துட்டு உடுப்புக் கழுவி,சமச்சி தனியா என்ன செய்யப்போறனோ?" அங்கலாய்த்தாள் சதா.

"எனக்கிட்ட உட்டுட்டு போ சதா.இந்த குட்டிய நான் வளக்கன்". என மீண்டும் கொஞ்சினாள் இஷானா.சதாவும் இப்படித்தானே குண்டா கொழுகொழுன்டு இருப்பாள்.காலம் எவ்வளவு வேகமா போயிட்டு.கல்யாணம் முடிச்சி ஒரு மாசத்துல போன மருமகன் இப்போ மகளையும் பேரப்புள்ளையையும் வெளிநாட்டுக்கு எடுக்கபோறார்.அடுத்த மாசம் ஃப்ளைட். அதன் பிறகு??? இஷானாவுக்கு அவர்கள் இல்லாததை நினைத்துப்பார்த்தால் நெஞ்சே வெறுமையாகிப்போகும்.ஆனால் இழப்பு பிரிவு இதெல்லாம் அவளுக்கு புதிதில்லையே.

"உம்மா..... எனக்கி கொச்சிக்காத்தூள் மாவு இதெல்லாம் ரெடி பண்ணித்தாங்க.அவர் சொன்ன அங்க சமைக்கனுமாம்.எனக்கி பெரிசா சமையலும் தெரியா.என்னம்மா செய்யப்போறன்".அவள் புலம்பலோ நின்றபாடில்லை.சதா தன் கணவனுடன் வெளிநாட்டுக்குப்போற கனவில் மிதந்துகொண்டிருந்தாலும் இன்னொருபக்கம் பதட்டமாகவும் இருந்தாள்.என்ன இருந்தாலும் தன் தாயை அண்டியே வாழ்ந்த பெண்.எல்லாத்திற்கும் அன்னையை சார்ந்து இருந்த கூண்டுக்கிளி தனியாக பறக்கும்போது  தடுமாறுவது இயல்புதானே.

"சதா....உனக்கு இருபது வயசு தாண்டியாச்சி.முதல்ல உன்ன படிக்க வச்சி வேலைக்கி அனுப்பனும் என்டுதான் நினைச்சன்.ஆனா இறைவன் இதுதான் நலவுண்டு இன்னொரு பாதைய காட்டினான்.நல்ல மாப்பிள்ளை.அழகான புள்ள அதைவிட என்ட விருப்பம் போல மருமகன் உன்னை ஒன்லைன்ல படிக்கிற ஏற்பாடும் செய்திருக்காரு.இது எல்லாத்துக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லிட்டே இரு அப்பதான் உன்ட வாழ்க்கைல பரக்கத் இருக்கும்.எத்தனை நாளைக்கி உம்மா வார.இனி நீதான்

எல்லாத்தையும் கவனிக்கனும்.வாழ்க்கை எப்பவும் நேரா இருக்காது.பிரச்சினை வரும் அழுகை வரும் கஷ்டம் வரும் அப்பல்லாம் மூலைக்கி போய் பயந்து கண்ணை மூடப்போடா.துணிஞ்சி போராடனும்.சமாளிக்கனும்.ஆனா என்ன மாதிரி எல்லாத்துக்கும் அமைதியா மட்டும் இருக்காத.உன் மனசுக்கு சரின்டு பட்டதை அல்லாஹ்கு பொருத்தமானதுன்டா பயப்படாம செய்.எல்லாம் சரியா நடக்கும்.இன்ஷா அல்லாஹ்."

"உம்மா.....நீங்க இல்லாம நான் எப்படி?" சற்றுமுன் இஷானா சொன்ன புத்திமதிகளை மறந்து அழத்தயாரான மகளை பார்க்க, அவர்கள் பேசுவதை வாய்பார்த்துக் கொண்டிருக்கும் தன் பேரப்பிள்ளை பெரியவனாகத் தெரிந்தான்.

"நான் ஒவ்வொரு நாளும் உங்களுக்கு கோல் எடுப்பன்.நீங்க எந்த வேலையும் இனி செய்ய வேணா.வேலைக்கி ஆள் வைப்பம்.நான் போனதுக்கு பிறகு ரெஸ்ட்டா இருங்க.ஒரு டைம் உங்களையும் துபாய் எடுக்கிறன்டு அவர் சொல்லிருக்கார்.நாம எல்லாரும் அங்கயே இருப்பம்.முக்கியமா உங்கட ஹஸன் குட்டிக்கி நீங்க வேணும்.நீங்க மிச்ச நாள் தனியா இருக்கமாட்டீங்க.இனி உங்களப் பார்க்க நாங்க மூணு பேரு இருக்கம்".என இஷானாவின் மடியில் தலைசாய்த்தாள் சதா.

வழமைபோல விரக்தியாய் சிரித்தவள்,"சதா....கூடவா யோசிக்காத.இன்னும் நாலு நாள் தான் இருக்கு.எல்லாம் பெக் பண்ணிட்டியா.நீ சொன்ன சாமான் எல்லாம் நாளைக்கி ரெடியாகிடும்.நிஷா ராத்தாட்டதான் ஓடர் கொடுத்த அவ தந்திடுவா.மருமகன் எப்ப வார?

"முதலாம் தேதி வாரார்.நாங்க அதுக்கு அடுத்த நாள் கொழும்பு போறம்.நாலாம் தேதி ஃப்ளைட் ."என்றாள் சதா.அப்போதுதான் இஷானாவிற்கு நினைவு வந்தது.நதீரா வருவேனென்றாளே.மருமகனும் இருப்பார்.நதீரா எதையும் வெளிப்படையாகப் பேசுபவள்.தோன்றினால் கேட்டுவிடும் ரகம்.இஷானாவிற்குப் பதட்டம் தொற்றிக்கொண்டது.""சதா..நான் தொழப்போறன்.புள்ளய கழுவி தூங்க வை..என்றவள் வுழு செய்து முசல்லாவை விரித்தாள்.நதீரா மறுமணம் பற்றி பேசிய நாளிலிருந்து இஷானாவின் மனதில் பல வருஷங்களாக அடைத்துவைத்திருந்த அவள் ஏக்கங்கள் பேயாட்டமாடியது.அது அவளுக்கும் படைத்த இறைவனுக்குமான அந்தரங்கம்.

நதீராவுக்கு சரியென்று சொல்ல வாய் வந்தாலும் அவளது பயந்த குணம் அதற்குத்தடையாக இருந்தது.நான் மறுமணம் செய்தா சதா மருமகன் எல்லாருமே என்ன வெறுத்திடுவாங்க.தப்பாவே பார்ப்பாங்க.எனக்கு இது தேவையா? கொஞ்ச நாளாவே சதாவின் சிடுசிடுப்பான பேச்சும், முகபாவனையும் அவ்வளவு வருத்தத்தை தருதே. அடுத்தவர்கள் என்ன சொல்வார்களோ என்ற பயத்துடன் வாழப்பழகிய இஷானாவிற்கு இத்திருமணப்பேச்சு கடக்கமுடியாத மலையாகத் தெரிந்தது.இறைவனிடம் முறையிட்டும் கூட மனதின் பாரம் ஏனோ அவளுக்கு இறங்கவில்லை.தொடர்ந்து வந்த நாட்களில் அவளையறியாமலே நெஞ்சை நீவி விட்டுக்கொண்டாள் இஷானா.

"உம்மா உங்களுக்கு புது ஃபோன்.உங்கட மருமகன் நான் சொல்லாமலே வாங்கிட்டு வந்திருக்காரு.இதுல நினைச்ச டைமுக்கு நீங்க என்னோட முகம் பார்த்து பேசலாம்.தனியா இருக்குற உணர்வே வராது.நான் எப்படி என்டு காட்டித்தாரன்." என குதூகலித்தாள் சதா.அவளைப் பொறுத்தவரை நதீரா சொன்னது போல தான் போனாலும் தன் உம்மா தனிமையாக உணரக்கூடாது என்பதுதான்.அவளோடு பேசுவதும் ஹஸனைக் கொஞ்சுவதும் வீட்டை பராமரிப்பதும் தான் இஷானாவின்

உலகம் என்று நினைத்துவிட்டாள்.அதைத் தாண்டி எதையும் சதாவால் சிந்திக்க முடியவில்லை.

"எனக்கு தூக்கம் வருது சதா.இன்னும் நான் அஸர் தொழல்ல.தொழுதுட்டு தூங்கப்போறன்.இந்த ஃபோனப்பத்தி பிறகு சொல்லித்தா."என வழமையான புன்னகையுடன் அறைக்குச்சென்றாள் இஷானா.ஒரு நாள் கூட இந்நேரத்தில் தூங்கப்போகாத தன் தாயை அதிசயமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள் சதா.

உம்மாட மனசுல என்ன இருக்கு.எல்லாத்துக்கும் அமைதியா சிரிக்கிறாங்க.யோசனையோடு நடந்தவள் ஹஸனோடு விளையாடிக்கொண்டிருந்த தன் கணவனைக் கண்டாள்.காலையில் தான் டடாவை ஒட்டிக்கிட்டானே.என்னதான் ஃபோனில் பேசினாலும் நேரில் இருப்பது போல் வருமா.இனி அவரைப் பிரிஞ்சி இருக்கவே கூடாது. கணவன் தோளில் சாய்ந்துகொண்டாள் சதா.மனதில் இருந்த பாரம் குறைந்ததைப் போலிருந்தது.

"அவளும் வாழட்டுமே சதா.மகளா யோசிக்காத.ஒரு பொம்புளயா யோசி" என்ற நதீராவின் பேச்சு அவளுக்கு திடீரென்று நினைவுவர அப்படியே ஸ்தம்பித்துப்போனாள் சதா.எனக்காக இவரு இருக்காரு.என்டம்மாக்கு இதுவரைக்கும் யாருமேயிருந்ததில்லை.எப்டி வாப்பா இல்லாம சமாளிச்சாங்க.ஹஸனின் சின்னச் சின்ன அசைவுகளைக்கூட நேர காலம் பார்க்காமல் கோல் எடுத்து கணவன் ருஷானிடம் சொன்னால்தான் அவளுக்குத் தூக்கமே வரும்.தலைவலித்தால் கூட உம்மாவிடம் சொல்வதற்கு முதல் ருஷானிடம் தான் சிணுங்குவாள்.இது எதுவுமே அவள் தாய்க்கு இருந்ததே இல்லியே.சதாவிற்கு அழுகை வெடித்துக்கொண்டு வந்தது.

ருஷானுடன் பேசி நல்ல முடிவுக்கு வந்தவளாய் நதீராவுக்கு அழைத்தாள்.

"சதா நான் கொழும்பிருந்து மாமிட்ட வந்துட்டன். இரவு அப்டி உங்க ஊட்டுக்குத் தான் வாரன் மகள்…உங்கட மனசு மாறினதுல சந்தோசம்."

அல்ஹம்துலில்லாஹ்.எவ்வளவு காலத்துக்குத்தான் அடுத்தாக்கள் என்ன நினைப்பாங்கன்டு யோசிச்சி அவளும் வாழுற.விதவைன்டா உணர்ச்சி எல்லாம் மரத்துப்போனவளா.பாவம் இஷானா.சரி இனி நான் பாத்துக்குறன்.அவள்ட மனசுக்கு நல்ல மருமகனாவே அல்லாஹ் அனுப்பிருக்கான்.ருஷான நேர்ல சந்திச்சி நன்றி சொல்லனும்."

"நதீராவின் சந்தோசத்தைக் கேட்ட சதாவிற்கு குற்ற உணர்வாக இருந்தது.நண்பியாக அவர் யோசிக்குமளவிற்கா நான் உம்மாட மனசை உணராம விட்டுட்டன்.மடச்சி மாதிரி கோபமாக்கூட பேசி இருக்கன்.பாவம் உம்மா…என்ட முடிவ எதிர்பார்த்தாங்க.ஆனா நான் அவங்க மனச மதிக்காம விட்டுட்டனே..மன்னிச்சிருங்கம்மா."

இஷானாவை எழுப்ப மனமில்லாமல் அறை வாசல் வரை போய் பலதடவைகள் திரும்பி வந்துகொண்டிருந்தாள்.நாளைக்கி கொழும்பு போறதுக்குள்ள உம்மாக்கு புதுசா ஒரு வாழ்க்கைய காட்டனும்.அவங்க தியாகத்துக்கு நான் செய்யப்போற நன்றிக்கடன் இதான்.

சதா யோசித்துக்கொண்டிருக்கும் போதே இஷானாவின் ஃபோனுக்கு கோல் வந்தது.நதீரா

எடுக்காங்க."மஃரிப் பாங்கு சொல்லப் போகுது.இன்னுமா தூங்குறாங்க.??..ஃபோன் பெல் சத்தத்துடனே சென்றவள்,

"ம்மா….எழும்பல்லியா? நதீரா ஆண்டிதான் எடுக்கிறாங்க.உம்மா, உம்மா..??" சதாவிற்கு உடம்பே நடுங்கிப்போனது."ஹய்யோ.. இங்க வாங்க.என்டம்மா உடம்பெல்லாம் குளிரா இரிக்கி.என்னம்மா எழும்புங்களேன்.என்ட தங்கம்மா… எழும்புங்க..அல்லாஹ்." சதாவின் அழுகுரலில் ருஷான்

ஓடிவந்தான்.நதீராவின் அழைப்புக்குரியவள் இல்லை என்பதால் அது நின்றுபோனது.

ஆம் இஷானாவின் உயிர் பிரிந்திருந்தது.சதா பரிதாபமாக அழுதாள்.வாழும்போது மதிக்கப்படாத தாயின் உணர்வுகளை நினைத்து நினைத்து அழுதாள்.ஈடு செய்ய முடியாத அந்த இழப்பிற்கு முன்னால் அடுத்தவர்களின் சமாதானங்கள் ஒன்றுமில்லால் போக மயங்கிச்சரிந்தாள் சதா.

ஆனால், இஷானாவின் முகத்தில் இதுவரை இல்லாத அமைதி தெரிந்தது.அது உலகத்திற்கு சொந்தமான அத்தனை ஆசாபாசங்களை துறந்ததால் வந்ததா? அல்லது அடுத்தவர்களின் விருப்பத்திற்கான வாழ்க்கை முடிந்துவிட்டது என்பதால் வந்ததா? பதில்..வழமைபோல இறைவனுக்கும் அவளுக்குமான அந்தரங்கம்தான்.

**நுஸ்ரத் அமானா**

**சாய்ந்தமருது**



## கவிதை

# புறப்படு பெண்ணே!



சுவர்களுக்குள் வாழ்வை
சுருக்கியதும் ஏன் பெண்ணே
விரிந்திருக்கு உலகம்
வீறு கொண்டு வா பெண்ணே

மானத்துக்காக மட்டும்
மரபுகளைப் பார் பெண்ணே
முகம் கொடுத்து பிற சவாலை
முறியடிப்போம் வா பெண்ணே

சிறைக்குள் இருந்து கண்ணீர்
சிந்துகிறாய் ஏன் பெண்ணே
சீதனத்தை ஒழிப்போம்
சிறகடித்து வா பெண்ணே

அடுப்படிக்குள் மட்டும் நீ
அடங்கியதும் ஏன் பெண்ணே
உருப்படியாய் பணிகள் செய்வோம்
உடனடியாய் வா பெண்ணே

ஆணைப் போல் உன்னிடமும்
ஆற்றலுண்டு தான் பெண்ணே
ஆளுமையை நிரூபிக்க
அணி திரள்வோம் வா பெண்ணே

குழந்தையைப் பெற்று மட்டும்
குவிக்க நீ வேண்டாம் பெண்ணே
மடந்தையாய் இருந்திடாமல்
மடை திறந்து வா பெண்ணே

அனைத்து துறைகளிலும்
அரிவையர்கள் உளர் பெண்ணே
சளைக்காமல் பலதிலுமே
சாதிப்போம் வா பெண்ணே

வீட்டுக்குள் முடங்கினால் உன்
விவேகம் எல்லாம் வீண் பெண்ணே
நாட்டை வளர்த்தெடுப்போம்
நடை பயின்று வா பெண்ணே

பார்ப்போரின் போதை தீர்க்கும்
பதுமையில்லை நீ பெண்ணே
கேட்போர்க்குப் பதில் அளிப்போம்
கிளம்பி வெளி வா பெண்ணே

மென்மையுடன் சேர்த்துன்னில்
மேன்மையும் தான் உண்டு பெண்ணே
உண்மை இதை உணர்த்துதற்கு
ஓடோடி வா பெண்ணே

உரிமையைப் பெறும் தகுதி
உனக்கும்தான் உண்டு பெண்ணே
புதுமைகள் பல படைப்போம்
புறப்பட்டு வா பெண்ணே



**றம்ஸானா சமீல்**
**அக்கரைப்பற்று**

# உலகம் முழுவதும்  எங்கள் கதைகள்

## திறன் நோக்கு.



ஸ்ரீலங்கா பென் கிளப் தலைவி சம்மாந்துறை மஷூறா  ஜே.பி அவர்கள் தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு தங்கள் அமைப்பினால் வெளியிடப்படும் உலகம் முழுவதும் எங்கள் கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வில் உரை நிகழ்த்த வருமாறு சங்கை செய்து என்னை அழைத்திருந்தார்.

சிரேஸ்ட இலக்கியவாதியான  மஷூறா அவர்கள்பற்றி நான் முப்பது வருடங்களாக அறிவேன். சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகத்தில் நான் பிரதிக் கல்விப்பணிப்பாளராக கடமையில் இருந்தபோது அவர் அப்பிரதேசத்துப் பாடசாலை ஒன்றின் ஆசிரியராக இருந்தார். தனது பாடப் பொறுப்புகளுக்கும் மேலதிகமாக தனது தொடரான இலக்கியப் பணிகளுக்கிடையே மாணவர்களுக்கான ஆக்க முயற்சி வேலைகளிலும் அதுபோன்ற வேளைகளிலும் தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். அவரின் தலைமை இவ்வமைப்பின் பேறு எனலாம்.

அவரின் அழைப்பை பெருமையோடு ஏற்று இங்கு வந்திருக்கும் நான் குறிப்பிட்ட சிறுகதைத் தொகுப்புபற்றிய எனது திறன்நோக்கு உரையினை செப்பமாக நிகழ்த்த இறைவனின் உதவியை வேண்டுகின்றேன்.

தமிழின் முதலாவது முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்று இலக்கிய வரலாறு சித்தி ஜூனைதா பேகம் என்பவரைக் குறிப்பிடுகின்றது. அவர் தென் இந்தியாவின் நாகூர் என்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர். பன்னிரெண்டு வயதில் திருமணமாகி பதினேழு வயதில் விதவையானவர். இஸ்லாத்தில் ஆண்களுக்கொரு நீதி பெண்களுக்கொரு நீதி கிடையாது என்றும் எது ஆண்களுக்கு ஆகுமோ அது பெண்களுக்கும் ஆகும் என்று எழுபது வருடங்களுக்கு முன்னமே பெண்ணுரிமைபற்றி உரத்துப் பேசியவர்.எழுதியவர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நயீமா சித்தீக் என்பவர் முதலாவது முஸ்லிம் பெண் சிறுகதை எழுத்தாளர் என்று குறிப்புகள் உள்ளன. அவர் ஹப்புத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவரைத் தொடர்ந்து வரக்காப்பொல ஹைறுன்னிசா, லறீனா அப்துல் ஹக் போன்ற பல முஸ்லிம் பெண் சிறுகதையாளர்களின் பட்டியல் விதையாகி வளரத் தொடங்கி இன்று நியூசிலாந்து மரினா இல்யாஸ் ஷாபி, சம்மாந்துறை  மஷூறா, கண்டி அறபா மன்சூர் என்று விருட்சமாக வளர்ந்து நிற்கிறது.

இலங்கையில் 2018 இல் ஈழவாணி என்பவர் பெண்களின் சிறுகதைத் தொகுப்பை காப்பு என்ற பெயரில் வெளியிட்டார். மூவினத்துப் பெண்கள் எழுதிய நாற்பத்தி ஆறு சிறுகதைகளை அது தாங்கி இருந்தது. சிங்கள மொழிக் கதைகள் தமிழ்க் கோலம் பூண்டன. நயீமா சித்தீக் , கெக்கிராவ சஹானா,  சுலைமா ஏ சமி, லறினா அப்துல் ஹக் ,  ஷாமிலா சரீப் , ஜெஸீமா ஹமீட் ஆகிய ஆறு முஸ்லிம் பெண் பிரபலங்களின் கதைகள் அதில் அடக்கம்.

அதன் தொடர்ச்சியாகவே உலகம் முழுவதும் எங்கள் கதைகள் என்ற பெயரில் பதினைந்து சிறுகதையாளர்களின் கதைக் கோர்வையோடு இங்கு குழுமி இருக்கிறோம். முஸ்லிம் பெண்களின்

முதலாவது சிறுகதைத் தொகுப்பாகவே இது குறி சுடப்படுகின்றது.

ஒரு சிறுகதையின் தரமும் கணிப்பும் என்பது கதையின் கரு, உத்திமுறை, வடிவம் ,பாத்திர வார்ப்பு, புனைவு மொழி ,தொடக்கமும் முடிவும் என்று பல உட்கூறுகளில் தங்கி உள்ளன.

இதனை மனதில் கொண்டு ‘உலகம் முழுவதும் எங்கள் கதைகள்’ என்ற கோவையின் பதினைந்து கதைகளையும் வாசித்தேன். மனம் திருப்தியைச் சுவைத்தது என்று நான் ஒப்புதல் தருகிறேன்.

திறன்நோக்கு என்பது ஒரு படைப்பை ஆழ வேரோடி அணுகும் முறை என்று கூறலாம். தமிழ் இலக்கிய வெளியிலே பல திறன்நோக்கு அணுகுமுறைகள் பயன்பாட்டில் உள்ளன. சமூகவியல் அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, அழகியல் அணுகுமுறை, அமைப்பியல் சார்ந்தது என்று பலவகையான அணுகுமுறைகளை நாம் அறிந்திருக்கிறோம். இவற்றிற்கும் அப்பால் நூல் அறிமுகம் , நூல் நயம், அறிமுகக் குறிப்பு, நயத்தல் உரை, இரசனைக் குறிப்பு என்று ஒவ்வொரு கோணத்திலும் வெவ்வேறு கோலத்திலும் திறன்நோக்கு எத்தனங்கள் இடம் பெற்று வருகின்றன.

இத்தொகுதி பற்றிய எனது கருத்துக்களை நோக்கி உங்களை அழைத்துச் செல்ல விரும்புகின்றேன்

கதைகளின் அணிவகுப்பில் மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய ‘புதிய கனவுகள்’ என்ற கதை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் பாங்கில் வெளிநாட்டு கலாச்சாரத்தின் இன்றைய தரிசனத்தை விளக்குகின்றது. மொத்த கதைகளில் இருந்தும் வேறுபட்ட ஒரு கதை.

மற்றொரு கதை சுகவீனமுற்ற நிலையில் டாக்டராக வேலை செய்யும் தனது பேரனைக் காத்திருந்து ஏமாற்றம் அடைந்து சந்திக்காமலே இறந்து போகும் மூத்தமாவின் கதை. அதனை சம்மாந்துறை மஷூறா ‘விலை போகும் இலட்சியங்கள்’ என்ற தலைப்பிலே தருகிறார். தனது மனைவியின் கட்டுப்பாட்டில் வாழும் படித்தவர்களின் முகத்திலே காறித் துப்புகிறது இந்த கதை. கதையின் முடிவும் பாராட்டும் முறையில் அமைந்துள்ளது.

ஜேம் மரத்தின் கீழும் ஞானம் பிறக்கும் என்று கதை எழுதி இருக்கிறார் சுசானா முனாஸ். இவை இத்தொகுதிக்குப் பெருமை சேர்க்கும் சிறப்;பான கதைகள் .

,பொன் கூடுகள் சிதைகையில், என்ற கதை கணவன் மனைவி பிரிவினால் வரும் தாக்கம் பிள்ளைகளை வந்து சேரும் என்பதை விளக்கும் மற்றுமொரு சிறப்பான கதை. பாய்ஷா அலி எழுதி உள்ளார்.

நிலவோடு பேசுகிறாள் என்ற அறபா மன்சூரின் கதையும் நல்ல கதை. தன்னை விட்டுப் பிரிந்துபோன கணவனும் அவனின் தாயும் தன் கண் எதிரே விபத்தில் இறந்து போகும் கதை. மனச்சாட்சிக்கு அப்பால் இருந்து நோக்கும்போது மனத்தை உருக்கும் கதை. கதை சொல்லும் பாங்கு கைதட்டல் வாங்குகிறது.

ஜெஸ்மின் ரமீஸ் எழுதிய ‘விடை காணாத வினாக்கள்’ என்ற கதையும் நல்ல கதையே.

கறுத்தக் கொழும்பான் என்ற எம்.பி.பர்ஷானாவின் கதை தலைப்புக்காக மட்டுமல்லாமல் மனதுக்கு வெல்லம் பூசும் கதையாகவும் உள்ளது.

பெண்ணியம்பற்றி இன்று பலரும் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். இந்தத் தொகுதியின் கதை சொல்லிகள் எவரும் பெண்ணியவாதிகளா என்பது எனக்குத் தெரியாது.

பெண்ணியம் என்பது இலக்கியக் கோட்பாடு அல்ல. அது ஒரு அரசியல் கோட்பாடு. கம்யூனிசம் , சோசலிசம், முதலாளித்துவம் என்பதுபோல

பெண்ணியமும் ஒரு அரசியல் கோட்பாடு ஆகும். அது பெண்ணின் சமத்துவம் , பெண்ணின் விடுதலை ஆகிய இரு நிலைப்பாடுகளைக் கோரி நிற்கின்றது. அந்தக் கோட்பாட்டை ஆதரித்து எழுதுவது பெண்ணியம் சார்ந்த இலக்கியம் ஆகும்.

ஒரு புனைவு தொடர்பில் பெண்ணியம் சார்ந்த பார்வை என்பது பின்வரும் எட்டு விடயங்களை முன்வைத்து அணுகுவதாகும். அவை பெண் ஆக்கல், அதிகாரப் பால், பெண் வெறுப்பு, பெண்பற்றிய படிமங்கள், இணைமுரண் , இரண்டாம் நிலைச் செயற்பாடு, உடல் புனிதம் , பெண்ணிய மொழி என்பனவே அந்த எட்டு வகைகளுமாகும். அவை ஒவ்வொன்றுபற்றியும் விரிவாக இங்கு பேசுதல் சாத்தியம் அல்ல. ஆனால் எடுத்துக்காட்டாக பெண் ஆக்கல் என்ற முதல் வகையை விளக்க விரும்புகின்றேன்.

குறிப்பிட்ட புனைவில் ஒரு பெண் பாத்திரம் பலவீனமானவளாக சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவளாக கணவனின் அடிமையாக எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறாள் என்று நோக்குவது பெண் ஆக்கல் என்ற பிரிவில் அடங்கும்.

மேற்படி எட்டு கூறுகளையும் புனைவின் ஊடாக அணுகுவதன் மூலம் பெண்ணியம் சார்ந்த திறன்நோக்குப் பார்வையை வெளிக் கொண்டு வரலாம்.

இச்சிறுகதைத் தொகுதி முழுவதும் ஆற்றல் உள்ள பெண்கள் அமைப்பின் உறுப்பினர்களால் எழுதப்பட்ட கதைகள் என்பதால் பெண்ணிய அணுகு முறையை நான் தவிர்த்துக் கொண்டேன். ஆனாலும் பெண்ணியம் சார்ந்து ஒலிபரப்புச் செய்ய இத்தொகுதியில் சில கதைகள் உள்ளன.

சுயம் தெளிகின்றாள் என்ற அஸ்மா தீன் எழுதிய கதையும் விடுதலை என்ற ஹசனியா இர்பான் எழுதிய கதையும் இதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தொகுதியின் அநேக கதைகளின் பாத்திர வார்ப்பு கவனத்தை ஈர்க்கின்றது

புரிதல் என்ற கதையில் முஜீபாவின் பாத்திரம் பாத்திர வார்ப்புக்கான பதச் சோறாகும்

சிறுகதைகளின் இன்னுமொரு விடயம் அதன் புனைவுமொழிபற்றியதாகும்.

புனைவு மொழி என்பது கதையின் முக்கிய கூறுகளில் ஒன்றாக கருதப்படுகிறது. முக்கியமானதும்கூட. கதைக்கு உயிர் கொடுத்து வாசகனை நமக்கு பின்னால் அழைத்துச் செல்லும் மந்திர சக்தி புனைவு மொழிக்கு உண்டு. நல்ல கதை ஒன்று புனைவுமொழியின் பலவீனம் காரணமாக ஒதுக்கப்படும் சாத்தியமும் உண்டு. இத்தொகுதியில் உள்ள விலைபோகும் இலட்சியங்கள் என்ற கதையின் புனைவு மொழி நமது கிராமத்தின் புழங்கு மொழியாகும்.;

1960களின் மத்திய கந்தாயத்தில் பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ‘வீ’ என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். தொகுதியில் ஐந்தாவது கதையாக விலை என்ற கதை இடம்பெற்றது.

அக்கதையில் வருகின்ற ஒரு பந்தி தொடர்பில் நூலுக்கு அணிந்துரை வழங்கிய கனக செந்திநாதன் என்ற மற்றுமொரு பிரபல எழுத்தாளர் கதையாசிரியர் பொன்னுத்துரையிடம் குறிப்பிட்ட பந்தி ஆபாசமாக இருப்பதாகச் சொன்னபோது கதை எழுதிய பொன்னுத்துரை பின்வருமாறு பதிலளித்தார்.

“நீங்களோ நானோ வாழும் தளத்தில் இருந்து பார்ப்பதினால்தான் அது ஆபாசமாக தெரிகிறது. கதையின் பாத்திரம் வாழும் தளத்துக்கு போய் பாருங்கள். அங்கு பெண்கள் எல்லாம் கூடி இதைவிட ஆபாசமாக பேசிக் கொண்டிருப்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்” என்று பதில் சொன்னார்

அந்தப் பந்தி இதுதான்.

“இடைஞ்சல் வந்து மூண்டு நாள். கோயிலுக்குப் போறதுக்காக மூழ்கின நான். பொடிச்சி புறந்த பிறகு வந்த முதல் இடஞ்சல். கலங்கலாக பட்டுக்கொண்டே இருக்குது. ஒரே துவால”

இப்படித்தான் அந்த பகுதி முடிந்தது.

இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?

கணவனுக்கு மட்டுமே தெரிந்த பெண்கள் சமாச்சாரமான மாதவிலக்கு முகாமைத்துவம்பற்றி எந்த ஒரு தடையும் இன்றி பெண்களிடையே அந்த விடயம் பேசப்படுவதை நாம் அறிவோம். அதனை எழுத்தில் கொண்டு வருவதில் என்ன பிழை என்று இப்போது குரலெழுப்பும் காலம் வந்து கொண்டிருக்கிறது. முன்னைய காலத்தில் ஏன் இன்றைய காலத்திலும்கூட இதுபோன்ற விடயங்களை பச்சையாகச் சொல்லப்படுவதற்கும் எழுதப்படுவதற்கும் பலத்த எதிர்ப்புகள் வருவது உண்டு. அது மெல்ல மெல்ல இப்போது விலகி வருவதாக உணர முடிகிறது.

இத்தொகுதியில் உள்ள அவள் தாங்கும் உலகம் என்ற சதீக்கா ரஸ்லியின் கதை ‘ பீரியட்ஸ் ’ பற்றியும் வயிற்றுவலிபற்றியும் இப்படிப் பேசுகிறது.

“என்ன மகள் ரிசானா வந்திருக்கா. நீங்க சமைக்காம படுத்திட்டிருக்கீங்க ”

“ பீரியட்ஸ் மாமி. அதான் வயிறு வலிக்குது. படுத்துட்டேன்.”

“ உங்களுக்கென்டா வருத்தம் குறைவுதான். அங்க ரிசானா பீரியட்ஸ் என்று வலியில துடித்துக் கொண்டிருக்கா. கொஞ்சம் சுடுதண்ணி கேக்குறா. சரி நீங்க படுங்க. நான் வேலய பாக்கிறன்” .

இவ்வாறு அந்த கதை நகர்கிறது. இது ஒரு முன்னுதாரணமாகும். இதற்கு முன்னரும் இந்த அமைப்பினால் வெளியிடப்படும் அவரி என்ற சஞ்சிகையில் எட்டாவது இதழில் பதினோராம் பக்கத்தில் ஆசிரியை என்ற தலைப்பில் ரியாஸா எம்.ஸவாஹிர் எழுதிய கவிதையும் இத்தகைய முன்னெடுப்பு என்று நான் கருதுகிறேன்

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பெண் எழுத்தாளர் பிளேட் (Blade) என்று ஒரு கதை எழுதினார். அதனை வாசிக்க முயற்சி செய்யுங்கள்.

இப்படியான விடயங்களை எழுத்தில் கொண்டு வரும்பொழுது அந்த எழுத்தின் பாத்திரம் ஒரு பெண்ணாக இருந்தால் அதை அவ்வாறே. எழுத வேண்டும் என்ற தைரியம் இப்போது நமது முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கு வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

இதுவரை இந்த நூலின் சில கனதியான விடயங்களைச் சுட்டிக் காட்டினேன். என்னளவில் நூலில் சில குறைகளும் இல்லாமல் இல்லை.

இந்த நூலின் பதினைந்து கதைகளுமே பெண்கள்படும் அவஸ்தைகளை, அவதிகளை, கணவனின் ஆணாதிக்கத்தை, பெண்வெறுப்புகளை, மாமியாரின் கொடுமைகளை பெண்களின் சம அந்தஸ்து கோரிக்கைகளை, பெண் விடுதலையின் தேவைகளைப் பேசும் கதைகளாகவே உள்ளன.

மேலுள்ள விடயங்களைத் தனித்தனியாகப் பிரதியாக்கும் விளைச்சல்களாகவே உள்ளன.

முஸ்லிம் பெண் எழுத்தாளர்கள் பேசுவதற்கு இன்னும் எவ்வளவோ வஸ்துகள் மலிந்து கிடக்கின்றன அவற்றைத் தேடி எழுத்தாக்க முயற்சியுங்கள்

சில எடுத்துக்காட்டுகளாக பின்வருவனவற்றை எழுதலாம்.

இன்று பரவலாகப் பேசப்படும் பெண்களுக்கான காதிநீதிபதி பதவி தொடர்பில் சாதகமாகவோ

பாதகமாகவோ எழுதலாம். கணவன் மரணித்தால் முஸ்லிம் பெண்கள் நான்கு மாதங்களும் பத்து நாள்களும் இத்தா இருப்பது பற்றி முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதவர்களும் நன்கு அறிவர்.ஆனால் கணவன் மரணிக்கும்போது கருத்தரித்திருக்கும் பெண்ணொருவர் எத்தனை நாள்கள் இத்தா கடமையில் இருக்க வேண்டுமென்பது பற்றி பலர் தெளிவான விளக்கத்தில் இல்லை.அதுபற்றி விளக்கி முஸ்லிம் கதைகளைத் தரலாம் இப்படி எத்தனையோ முஸ்லிம் சமாச்சாரங்கள் நமது காலடியில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

இப்படி எத்தனையோ விடயங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

(ஸ்ரீலங்கா பென் கிளப் அமைப்பினால் உலகம் முழுவதும் எங்கள் கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பு கல்முனை ஆஸாத் பிளாசா மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டபோது ஆற்றிய திறன்நோக்கு உரையின் கட்டுரை வடிவம்)

**ஏ.பீர்முகம்மது**

## அன்பின் வலயம்



அன்னையிடமிருந்துதான்
ஆரம்பித்தது.
தந்தையின் சுட்டு விரல் பிடித்து
நடை பழகிய போதெல்லாம்
தந்தையின்
அன்பின் ஆளுகையும்
அரசோச்சியது.

பள்ளிச் சிறுமியாய்
துள்ளித் திரிந்த காலத்தில்
தோழிகளோடு
வியாபித்து வளர்ந்தது.
உறவினர்களின்
அளவுகடந்த அன்பில்
வேரூன்றி.வளர்ந்து
எனதன்பின் வலயம்
விஸ்தீரணமாயிற்று.

வாழ்க்கைத் துணையின்
வரவோடு
நித்தியமானதாய்
சத்தியமானதாய்
வீறு கொண்டு வளர்ந்தது.
நேசிப்பின் உயிர்ப்பிடமாய்
இன்னொரு பரிணாமம்
ஊடுகடத்தப்பட்டது.

என் மடிக்குள் விழுந்த
வெள்ளிகளால்
தாய்மையன்பில் நெகிழ்ந்து
அன்பின் வலயம்
எல்லையற்றதாய்
முடிவிலியற்று பிரவாகித்தது.

அன்பின் வலயத்துள்
அவ்வப்போது வந்து போகும்
வலசைப் பறவைகளும்
என் வாழ்வை அர்த்தப் படுத்திற்று.

என் அன்பின் வலயத்துள்
எல்லைக் கோடுகளிட
எப்போதும் நான் விரும்பியதில்லை.

**மர்ளியா சக்காப்.**
**திருகோணமலை**

# கோடைகால பிரச்சினைகளும் தீர்வுகளும்
## ஆரோக்கியக் கட்டுரை



சூழலின் வெப்பம் மனித உடலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவதால். பாரதூரமான, தீங்கு விளைவிக்கும் பாதிப்புகளிலிருந்து நாமனைவரும் தப்பித்துக் கொள்ள சரியான சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும்.

எமது தேகம் ஆரோக்கியமாக இருப்பதற்கு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவதுடன் அதற்கான நடைமுறைகளையும் நிவாரணங்களையும் அவதானமாக பின்பற்றுதல் வேண்டும்.

நாம் போதிய ஆரோக்கியத்துடன் இருப்பதற்கான எளிய வழிகள் நிறைய உள்ளன.

இலங்கையில் பொதுவாக மார்ச் முதல் மே/ஜூன் வரை கோடைகாலம் ஏற்படுகிறது. ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வெப்பம் அதன் உச்ச நிலையில் காணப்படுகிறது. வெப்ப அலைகளும் அதிகமாக இவ்வேளைகளில் வீசக்கூடும். மக்கள் வெப்பம் தொடர்பான பிரச்சினைகளால் பெருஞ்சவால்களை எதிர்கொள்கின்றனர்.

கோடைக்காலத்தில் முக்கியமாகத் தாக்கம் ஏற்படுத்தும் உடல்நலப் பாதிப்புகளாவன.

வெப்ப அதிர்ச்சி (Heatstroke)

அதிக சூடான/ தீவிர வெப்பநிலையில் நீண்ட நேரம் இருக்க நேரிடுகையில் நமது உடல் அதிகமாக வெப்பமடையும். இதனால் மயக்கம், குழப்பம், இதயப்படபடப்பு போன்ற அறிகுறிகள் நமது உடலில் ஏற்படும் .இத்தீவிர நிலையே வெப்ப அதிர்ச்சி எனப்படுகிறது.

தோல் நோய்கள் மற்றும் வெயில் புண்கள்
காற்றின் புழுக்கம் அதிகரிப்பதால் சூட்டுப் புண்கள் மற்றும் பங்கஸ் தொற்று,கண் நோ, சொறி சிரங்கு போன்ற சரும நோய்கள் அதிகம் ஏற்படுகின்றன. சேதமடைந்த சருமமும், அதிகப்படியான வியர்வையும் பல்வேறு தோல் வியாதிகளை ஏற்படுத்துகின்றன. சூரிய ஒளியின் புறவூதாக் கதிர்கள் நமது சருமத்தில் படுகையில் வெயில் புண்களும் (Sun Burn) ஏற்படலாம்.

நீர் இழப்பு (Dehydration)

நீரிழப்பு என்பது உடலில் போதிய அளவிலான நீர்ச்சத்து இல்லாத நிலையாகும். பெரும்பாலும், போதிய நீராகாரங்களை உள்ளெடுக்காத காரணத்தினால் இக் காலத்தில் அதிகமாக ஏற்படும்.எனவே இக்காலங்களில் போதிய அளவான பழச்சாறுகள், பானங்கள், நீர் என்பவற்றை அருந்துதல் சாதகமான விளைவை ஏற்படுத்தும்.கோடையில்அதிக வியர்வை, வாந்தி வயிற்றுப்போக்கு போன்ற காரணிகளாலும் உடலிலிருந்து நீர் அதிக அளவில் வெளியேறுவதால் உடலின் நீர்த் தேவை அதிகரிக்கிறது.
அதை ஈடுகட்டாதபட்சத்தில் (நீர்க்கடுப்பு) சிறுநீர்த் தொற்று, சிறுநீரகக் கல்லடைப்பு, சிறுநீரகக் கோளாறுகள் என நோய்கள் ஏற்படும். இக்காலத்தில் நீரிழப்பைச் சரிசெய்ய நிறைய தண்ணீர் அருந்த வேண்டும்

வைரஸ் நோய்கள்

 இன்ஃப்ளூவென்ஸா (கோடை காய்ச்சல்), அம்மை வகை கொப்புளங்கள் போன்ற சில பொதுவான வைரஸ் நோய்கள் பரவுகின்றன. மேலும் கை, கால் மற்றும் வாய் மூலம் பரவும் வைரஸ் தாக்கங்களும் ஏற்படுகின்றன . ஏதுவான வெப்பநிலை, அதிகரிக்கும் ஈரப்பதம் காரணமாக வளியின் மூலம் இந்த நுண்ணங்கிகள் பரவிச் செல்கின்றன.

சுவாச நோய்த்தொற்றுகள்

 காற்று மாசுபடுவதால் மக்கள்தொகை அதிகமுள்ள நாடுகளில் சுவாச பிரச்சினைகளான ஆஸ்துமா மற்றும் ஒவ்வாமை போன்ற நிலைமைகள் உள்ளவர்களுக்கு இதன் தீவிரம் அதிகமாக இருக்கும். மகரந்தம் அல்லது பிற காற்றில் பரவும் தூசு துணிக்கைகளால் ஏற்படும் வைக்கோல் காய்ச்சல் (Hay fever), அல்லது பீனிசம் (Allergic Rhinitis) எனப்படும் ஒவ்வாமை ஏற்படும். தும்மல், மூக்கு அரிப்பு மற்றும் நாசி சிவந்து வீங்குதல் ஆகியன இதன் அறிகுறிகளாகும்

நுளம்புகளால் பரவும் நோய்கள்

 கோடை மழையின் நீர் தேங்கினால் அது நுளம்புகளின் இனப்பெருக்கத்திற்கு ஏதுவாகி நுளம்புகளால் பரவும் நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

அசுத்த நீரும் உணவும் மூலம் பரவிச் செல்லும் நோய்கள்

கோடையில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால், தண்ணீரை சிக்கனமாகவும், சேமிக்கும் நோக்கிலும் மாசுபட்ட நீரை பயன்படுத்தும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது, அத்துடன் அதிக வெப்பநிலையும் பக்டீரியா வளர்ச்சிக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துகிறது. பக்டீரியாக்களின் வளர்ச்சி காரணமாக அசுத்தமான நீர் மற்றும் சுகாதாரமற்ற உணவு மூலம் பரவும் நோய்களான கொலரா (வாந்தி பேதி),, நெருப்பு காய்ச்சல் (டைபாய்ட),, மற்றும் இரைப்பை குடல் அழற்சி போன்ற நோய்கள் கோடையில் பொதுவானவை. கல்லீரல் செயலிழப்பால் ஏற்படும் மஞ்சள் காமாலை, ஹெபடைடிஸ் எனப்படும் ஈரல் அழற்சி போன்ற நீரினால் பரவும் நோய்கள் இக்காலத்தில் அதிகம்.

சமநிலையற்ற தாதுப்பொருட்களைக் கொண்ட தண்ணீரைக் குடிப்பதால், உடலில் சோடியத்தின் அளவுக் குறைவு (ஹைப்போநட்ரீமியா- Hyponatremia) ஏற்படலாம். கோடையில் ஏற்படும் பருவகால மனநல பாதிப்பான மனச்சோர்வு ஏற்படலாம். அதிகப்படியான வியர்வை காரணமாக உடலில் தேவையான உப்பு குறைவதால், பலவீனமும்  குழப்பமும் ஏற்படலாம். கோடைக்காலத்தில்
 வெயிலின் நிற்கும்போது திடீர் மயக்கம் (Heat syncope) தாக்கலாம்.

கோடைக்காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிப்பது எப்படி?

*நாளொன்றுக்கு சராசரியாக 10-12 கிளாஸ் தண்ணீர் குடிப்பதை உறுதிப்படுத்துங்கள்.

*போதிய நீர்ச்சத்திற்காக இளநீர், மோர், தேயிலை, தர்பூசணி, நுங்கு மற்றும் எலுமிச்சை ஜூஸ் போன்ற புத்துணர்ச்சியூட்டும் இயற்கையான பானங்களை அருந்த வேண்டும். போதுமான நீர்ச்சத்தானது சுவாச மற்றும் இரைப்பைக் குழாய்களில் உள்ள வழவழப்பான திரவ மேற்பரப்புகளை பராமரித்து நோய்க்கிருமிகளுக்கு எதிரான முக்கியமான தடுப்பாக அமைகிறது. நோயெதிர்ப்புப் புரதங்கள் மற்றும் நொதியங்களை கொண்ட உமிழ்நீர் உற்பத்திக்கும் தண்ணீர் உதவுகிறது. போதிய நீர்ச்சத்துடன் இருப்பதால் வெப்ப அதிர்ச்சி ஏற்படாது பாதுகாத்துக்கொள்ள முடிவதுடன்

, நோயெதிர்ப்பு கலங்கள் மற்றும் நிணநீர் தொகுதிகள் சரியாக இயங்குகின்றன.நச்சுகளைத் திறம்பட அகற்றித் தொற்றுநோய்களுக்கு எதிரான உடலின் மீட்புத் திறனையும் நீர் மேம்படுத்துகிறது.

*இறுக்கமான ஆடையை தவிர்த்து தளர்வான பருத்தி ஆடையை அணிந்து

வெளியே செல்லுங்கள்.கருப்பு மற்றும் அடர் நிறங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள்

* வெளியே செல்லும் போது சூரிய பாதுகாப்பு கண்ணாடி மற்றும் தொப்பி அணிந்து கொள்ளுங்கள்
நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகளை உணவில் சேர்ப்பது நமது ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கும் மிகமிக அவசியமாகும்.

✓விட்டமின்கள் மற்றும் அன்ட்டி-ஒக்ஸிடன்ட்கள் நிறைந்த பழங்கள் மற்றும் காய்கறிகள் அவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் திராட்சைப்பழங்கள் போன்ற சிட்ரஸ் பழங்கள் – நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் வைட்டமின் C-ஐ உடலுக்கு வழங்குகின்றன.அன்ட்டி ஒக்ஸிடன்ட்கள் நிறைந்த பெர்ரி வகைகள், தொற்றுநோய்களுக்கு எதிராக வலுவான பாதுகாப்பினை வழங்குகிறது.

✓அடர் பச்சைக் கீரைகளில் வைட்டமின்கள் A மற்றும் C ஆகியவை நிறைந்துள்ளதால், அவை நோயெதிர்ப்பு ஆரோக்கியத்தினை ஊக்குவிகின்றன.தர்பூசணி மற்றும் வெள்ளரி உடலுக்கு தேவையான நீர்ச்சத்தினை அளித்து உடல் செயற்பாடுகளைச் சீராகப் பேணுகின்றன.

✓பூண்டில் உள்ள அல்லிசின் என்ற நுண்ணுயிரி எதிர்ப்பு காரணியைப் பெற கோடையில் சமைக்கும் உணவுகளில் அதனை அடிக்கடி சேர்க்கலாம்.

✓தயிர் மற்றும் எதிர்ப்பு சக்தி நிறைந்த உணவுகள் ஆரோக்கியமான குடல் நுண்ணுயிரிகளைப் பராமரித்து, நோயெதிர்ப்பை சீராக்கும்

✓சமிபாட்டுக்கு உதவுவது மட்டுமில்லாமல், நொதித்த சோறு-ஃபெர்மெண்ட்டட் ரைஸ் (பழைய சோறு )– குடல் ஆரோக்கியத்தை பேணுவதன் மூலம் ஊட்டச்சத்துக்கள் உறிஞ்சப்படுவதையும் அதிகரிக்கிறது.

கம்மங்கூழ் போன்ற பாரம்பரிய உணவுகளையும் உட்கொள்ளவேண்டும்.

*தனிநபர் சுகாதாரத்தைப் பேணவும்

நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க அவ்வப்போது கை கழுவுதல் தினசரி இரு தடவைகள் குளித்தல் சுத்தம் மற்றும் சரியான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் சருமத் தொற்றுகளைத் தடுக்கும்.

*பூசும்மருந்துகள்

வேர்க்குரு பவுடர்கள், விசிறிகள், லோஷன்களைப் பயன்படுத்தி கோடைக்காலத்தில் வியர்வையால் ஏற்படும் சருமப் பிரச்சினைகளைத் தடுக்கலாம். இம்மருந்துகள் வெளியில் இருந்து நோயெதிர்ப்பு சக்தியை ஊக்குவிப்பதோடு, மேற்படி தீவிர சரும நோய்கள் பரவாமல் தடுக்கின்றன. இந்த தயாரிப்புகளில் பெரும்பாலும் குளிரூட்டும் பண்புகளைக் கொண்ட உட்பொருட்களும், பக்டீரியா எதிர்ப்பு பண்புகளைக் கொண்ட மருந்துகளும் உள்ளன. அவை வியர்வையைக் கட்டுப்படுத்தவும், எரிச்சலைக் குறைக்கவும், சருமத்தை வறண்டு போகாமல் வைத்திருக்கவும் உதவுகின்றன. வெப்பமான மற்றும் ஈரப்பதமான சருமப்பகுதியில் தான் நோய்க்கிருமிகள் வசதியாக பல்கிப் பெருகுகின்றன. மேற்பூச்சாக பயன்படுத்தப்படும் எந்தவொரு தயாரிப்பினையும் முயற்சிக்கும் முன் பேட்ச் டெஸ்ட்-Patch test- சோதனை முயற்சி செய்வது அவசியம். அவற்றை வைத்திய ஆலோசனையைப் பெற்ற பின்னரே பயன்படுத்த வேண்டும்.

*உடற்பயிற்சி

நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்க உடற்பயிற்சி மிக சிறந்தது., கோடைக்காலத்தில் உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டியதில்லை. நல்ல உடல் செயல்பாடுகளில் ஈடுபடுவதால் நோயெதிர்ப்பு உயிரணுக்கள் உடலெங்கும் சென்றடைவது ஊக்குவிக்கப்படுகிறது.

நோயெதிர்ப்பு கலங்களின் கண்காணிப்பு மற்றும் எதிர்த்துப் போராடும் திறன் அதிகரிக்கிறது.உடற்பயிற்சிக்கு முன்னும், பின்னும் போதுமான அளவு தண்ணீர் ,பானங்களை அருந்துதல் வேண்டும்.

*வெப்ப அதிர்ச்சி மற்றும் சூட்டுப் புண்களிலிருந்து பாதுகாப்பு

சரும பாதிப்புகள் ஏற்படுவதைத் தவிர்க்க, வெயில் பாதுகாப்பு கிறீமை வெளியே
செல்வதற்கு 15-30 நிமிடங்களுக்கு முன்பு நன்கு தடவிக்கொள்ளவும். தொப்பிகள், கையுறைகள் மற்றும் சன்கிளாஸ் போன்ற பாதுகாப்பு ஆடைகளை அணிய வேண்டும். வெயில் உச்சத்தில் இருக்கும் போது முடிந்தவரை நிழலிலேயே இருக்கவும். சருமத்தின் நெகிழ்வுத்தன்மையை பராமரிக்க நிறைய தண்ணீர் குடிக்கவும்.

*உணவு நீர் மாசுபடுதலை தவிர்க்கவும்

உணவுகளை பாதுகாப்பான முறையில் கையாளுதல், தண்ணீரைப் பொருத்தவரை சுத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுதல், அசுத்தமான இடங்களில் சாப்பிடாமல் இருத்தல் போன்ற நடவடிக்கைகளால் நீர் மற்றும் உணவுப் பழக்கத்தினால் பரவும் நோய்களின் அபாயத்தைத் தடுக்கலாம். வரும்முன் காக்கும் இந்த அணுகுமுறை நமது நோயெதிர்ப்புத் தொகுதியின் வேலையைக் குறைக்கிறது.

*நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தடுப்பூசிகள்

குறிப்பாக குழந்தைகளுக்கு, அவர்களின் தடுப்பூசி அட்டவணையின்படி அனைத்து தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட வேண்டும். கோடையில் அதிகம் வரக்கூடிய காய்ச்சல், அம்மை, பெரியம்மை, சின்னம்மை, மஞ்சள் காமாலை போன்ற நோய்களுக்கு எதிரான நமது நோயெதிர்ப்பு ஆற்றலை தடுப்பு மருந்துகள் மூலம் வளர்த்துக் கொள்ளலாம். மேலும், சுகாதாரமற்ற நீர் மற்றும் உணவு வழியாகப் பரவும், வெப்பமான பருவநிலையில் அதிகமாக ஏற்படும் நெருப்புக்காய்ச்சல்/ தைபாய்டு மற்றும் ஈரல் அழற்சி ஹெபடைடிஸ் A போன்ற நோய்களிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசிகள் முக்கியமாகிறது.

*கட்டுப்பாட்டான பழக்கங்கள்

✓கொழுப்பு நிறைந்த , அதிக காரமான உணவுகள் ஜீரணிக்கக் கடினமாக இருப்பதோடு, உடலின் வெப்பத்தையும் குறைக்கலாம்.

✓மது அருந்தும் பழக்கம் இருந்தால், கோடைக்காலத்தில் அதன் அளவைக் கட்டுப்படுத்துவது நல்லது, ஏனெனில் இது நீரிழப்பிற்கு பெரும் பங்களிப்பது மட்டுமில்லாமல் – வெப்பநிலையை சீராகப் பராமரிக்கும் உடலின் திறனையும் குறைக்கிறது.

✓கோடைக்காலத்தில் வெந்நீரில் குளிப்பதை தவிர்க்கவும், ஏனெனில் அது உடல் வெப்பநிலையை அதிகரித்து வியர்வையை தூண்டும்.

✓உடற்பயிற்சி செய்வதாக இருந்தால், உங்கள் உடலுக்கு ஏற்ற, இலகுவான பயிற்சிகளை மேற்கொள்ளவும்; கடுமையான வெயிலில் வெளிப்புற பயிற்சிகளைத் தவிர்க்கவும்.

✓தாதுக்குறைவு (Hyponatremia), கோடைகாலத்தில் ஏற்படும் பருவகால மனநிலை பாதிப்பு(SAD), உப்பு குறைதல், மற்றும் வெப்ப மயக்கம் (Heat syncope) போன்ற நோய்கள் இதற்கு முன்பு ஏற்பட்டிருந்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மருத்துவரிடம் கேட்டறிந்து பின்பற்றுவது அவசியம்

**Dr ஜலீலா முஸம்மில் (MBBS/SL)**
**வைத்திய அதிகாரி**
**ஆதார வைத்தியசாலை**
**ஏறாவூர்**


HANAN
JEWELLERS
Hanan jewellers
kuttikarchi
kinniya-04
Mob:077-7244186
Tel:026-2236771

# அலசல் சமூகச் சித்திரம்

## கேடயம்.

பரீதா: மகள் மிச்ச நேரமா இந்த காலிங் பெல் அடிச்சுக்கிட்டே இருக்கு. போய் யார் என்டு பாருங்க மகள்.

றிபாதா: ம்... ம்ஹூம்.... ம்.... உம்மா கொஞ்சம் தூங்க விடுங்கம்மா. நோன்பு நேரம். எனக்கு எழும்ப ஏலா டயர்டா இருக்கு.

பரீதா: உம்மா கையில வேலையா இருக்கேன். ப்ளீஸ் டா செல்லம் கொஞ்சம் கதவை திறங்கடா.

றிபாதா: சரி திறக்கிறன்.

ஆ.... உம்மம்மா வாங்க வாங்க. அஸ்ஸலாமு அலைக்கும் எப்படி சுகமா இருக்கிறீங்களா? ஊர்ல எல்லாரும் நல்ல சுகமா? அதென்ன கையில பேக்? எனக்கு ஏதாவது கொண்டு வந்திருக்கிறீங்களா?

உம்மம்மா: அட றிபாதா குட்டி...

வஅலைக்குமுஸ் ஸலாம். எவ்வளவு வளர்ந்துட்டீங்க. இந்தாங்க உங்களுக்காக பெருநாளுக்கு சல்வார் ஒன்டு வாங்கிட்டு வந்தேன். இந்தாங்க பிடிங்க. உம்மா எங்கடா செல்லம்?

றிபாதா: உம்மா கிச்சன்ல சமையல் வேலயா இருக்காங்க. உம்மா யாரு வந்திருக்காங்க என்டு பாருங்க. உம்மம்மா வந்திருக்காங்க.

பரீதா: உம்மா....

வாங்க வாங்க. உங்களத்தான் எதிர்பார்த்துட்டு இருந்தன். இந்த வருஷம் எங்க வீட்ல தான் நீங்க நோன்பு பெருநாள் கொண்டாடணும். ஊர்ல தங்கச்சிமார் எல்லாரும் சுகமா இருக்கிறாங்களா?

உம்மம்மா: ஓ... எல்லாரும் நல்ல சுகமா இருக்காங்க.

நீங்களும் ஒவ்வொரு வருஷமும் உங்களோட பெருநாள கொண்டாட வரச் சொல்லி கூப்பிட்டுட்டு தான்



இருக்கிறீங்க. இந்த வருஷம் தான் அதுக்குரிய நேரம் வந்திருக்கு.

பரீதா: மிச்சம் சந்தோஷம் உம்மா.

உம்மம்மா: என்ன செய்யிறீங்க மகள்? சமையல் வேலையா?

பரீதா: நான் அரிசி களஞ்சிட்டு இருந்தன் உம்மா. நாம நோன்பு என்டாலும் சின்னவங்களுக்கு டைமுக்கு சாப்பாடு கொடுக்க வேணும் தானே.

உம்மம்மா: நல்லது மகள்...

ஆ... அரிசி களையும் போது தலையில ஒரு முக்காடு போடச் சொல்லி எத்தன தடவ மகள் உங்களுக்கு நான் சொல்லி இருக்கிறன்.

பரீதா: அவசரத்தில போட மறந்துட்டன் உம்மா. இதோ முக்காடு போடுறன்.

றிபாதா: அது ஏன் உம்மம்மா அரிசி களையக்குள்ள முக்காடு போடணும்?

உம்மம்மா: அது செல்லம் அரிசி சோறு சமைக்கும் போது நாம தலையில ஒரு முக்காடு போட்டுக்கொள்ளணும். பிஸ்மி சொல்லிக்கொள்ள வேணும். அது ரெண்டு காரணங்களுக்காக....

ஒன்டு தலமுடி நம்ம சமையல் பாத்திரத்தில விழக்கூடாது என்பதற்காக... மற்றது நம்ம சாப்பாட்டுல பரக்கத் கிடைக்கிறதுக்காக...

அல்லாஹ்வின் பெயர் சொல்லப்படுவதால எல்லாருக்கும் போதுமானதாகவும் நிறைவானதாகவும் நம்ம சாப்பாடு  இருக்கும்.

றிபாதா: அப்ப சமைக்க தொடங்கினதுல இருந்து முடியும் வரைக்கும் முக்காடு போட்டு தான் சமைக்கணுமா அது ரொம்ப கஷ்டமா இருக்குமே வேர்க்குமே

உம்மம்மா: இல்லடா செல்லம்.... இஸ்லாம் எங்கள ஒரு போதும்  கஷ்டப்படுத்தாது. சமையல் செய்யுற முழு நேரமும் முக்காடு போட தேவையில்ல. அந்த நாளையில எங்கட உம்மா உம்மம்மா எல்லாரும் முக்காடு போட்டு பிஸ்மி சொல்லி தான் சமையல் பாத்திரத்த அடுப்புல வைப்பாங்க. அப்படி செய்யும்போது அந்த உணவுல பரக்கத் ஏற்படும் என்டு சொல்லுவாங்க. அது சரிமா நீங்க பெரிய மனுஷி ஆயிட்டீங்கதானே... நீங்க ஏன் முக்காடு போடுறீங்க இல்ல? நான் சல்வார் கூட தந்த ஷோள் எங்கம்மா? அத எடுத்து போட்டு வாங்களேன்.

றிபாதா: இல்ல உம்மம்மா எனக்கு கஷ்டமா இருக்குது. வேர்க்குது. அலுப்பா இருக்குது. ஷோள் எல்லாம் வாணா....

பரீதா: உம்மா நான் எத்தனையோ தடவை சொல்லி பாத்துட்டன். இவ ஷோள் போடுறதாவே இல்ல. இனி ரெண்டு அடி கொடுத்து தான் இவள ஷோள் போட வைக்கணும்.

றிபாதா: இங்க பாருங்க உம்மம்மா....

உம்மம்மா: பரீதா... நீ பேசாம இரு. எந்த விஷயத்தையும் அடிச்சு திணிக்க முடியாது. சரியா  சொல்லி புரியவைக்கணும். நான் சொல்லி புரிய வைக்கிறேன். றிபாதா குட்டி இங்க வாங்கம்மா.

றிபாதா: என்ன உம்மம்மா?

உம்மம்மா:  உங்களுக்கு இப்ப பதிமூணு வயசு  ஆகுது. நீங்க இப்ப  பெரிய மனுஷி ஆயிட்டீங்க இல்லையா? நாம பெரிய மனுஷி ஆயிட்டோமென்டா சில விஷயங்கள பழகிக்கணும்.நீங்க இப்ப கொஞ்சம் வளந்துட்டீங்க. அப்ப உங்க உடம்ப முழுசா மூடி உடை  உடுத்தி முக்காடு போட்டுக்கணும்.

றிபாதா: ஏன் உம்மம்மா?

உம்மம்மா: நீங்க இப்ப வீட்டை விட்டு வெளியில போறீங்க. இப்ப முன்ன மாதிரி இல்ல. நீங்க கொஞ்சம் வளந்துட்டீங்க. உங்கள வெளியில இருக்கிற ஆட்கள் வித்தியாசமா பார்ப்பாங்க. இஸ்லாமிய சட்டப்படி பெண்கள் வீட்டை விட்டு வெளியே போகணும் என்டா முழுதாக உடலை மறைத்து தலையில் முக்காடு போட்டுத்தான் போகணும். இது உங்களுக்கு தெரியும் தானே. ஸ்கூல்ல எல்லாம் சொல்லித் தந்திருப்பாங்க இல்ல. எங்கட தலை முடிய நாங்க மூடுறது எங்களுக்கு பாதுகாப்பு தரும். முக்காடு என்கிறது ஒரு பெரிய பாரமான விஷயம் இல்ல. அது ஆண்களுடைய பார்வையில இருந்து எங்கள பாதுகாக்கும். வீண் பிரச்சனைகள்ள இருந்து எங்களை காப்பாற்றும். உங்களுக்கு தெரியுமா றிபாதா எங்கட சொர்க்கத்து பெண்கள் தலைவி பாத்திமா நாயகி அவங்க எப்படி வாழ்ந்தாங்க என்று. அவங்கட பிள்ளைகளான ஹஸன் (ரலி) ஹுஸைன் (ரலி) அவங்க கூட காணாத வண்ணம் தன்னுடைய தலைமுடிய மறைச்சு முக்காடு போட்டு கொள்ளுவாங்க. அவ்வளவு பேணுதலா இருந்தாங்க.

றிபாதா: அப்படியா? அதனாலதான் அவங்க சொர்க்கத்து பெண்கள் எல்லாருக்கும் தலைவியா இருக்காங்க இல்லையா உம்மம்மா?

உம்மம்மா: ம்.... சரியா விளங்கிடீங்க. என்ட பேத்தி கெட்டிக்காரி.

றிபாதா: ஓகே உம்மம்மா நான் வெளியே போகும்போது முக்காடு போடுறேன். ஆனா வீட்லயும் முக்காடு போடணுமா?

உம்மம்மா: வெளியே போகும்போது கட்டாயம் முக்காடு போடுங்க. அது ஒரு கேடயமா  இருந்து உங்களை பாதுகாக்கும். அந்நிய ஆண்கள் உங்க தலை முடிய பார்த்து ரசிச்சா அது அவங்களுக்கு பாவத்தை கொடுக்கும். அவங்கள அந்த பாவத்தை செய்யத்

தூண்டியதால உங்களுக்கும் அதிக பாவம் கிடைக்கும்.

றிபாதா: அப்படியா அப்ப நான் இனி கட்டாயம் வெளிய போகும்போது முக்காடு போடுறேன்.

உம்மம்மா: ஆனா வீட்ல எல்லா நேரமும் முக்காடு போடத் தேவையில்ல. வீட்டுக்கு அந்நிய ஆண்கள் வந்தா முக்காடு போடுங்க. உங்க மச்சான்மார் வீட்டுக்கு வந்தா முக்காடு போட்டு இருங்க. வீட்டுக்கு தண்ணி பில், கரண்ட் பில் கொண்டு வார அந்நிய ஆண்கள் முன்னால முக்காடு போடுங்க. ஹதியா கேட்டு ஒரு ஆண் வந்தா கூட முக்காடு போடுங்க. அதுபோல யாராவது கதவ தட்டினா கதவ திறக்க வரும்போது முக்காடு போட்டு வந்து தான் கதவ திறக்கணும். ஏனென்டா வெளியில் நிற்கிறது ஆணா பெண்ணா என்டு உங்களுக்கு தெரியாம இருக்கும் இல்லையா?

றிபாதா: புரியுது உம்மம்மா.

உம்மம்மா: ஆனா வீட்ல நாம தனியா இருக்கும்போதும் பெண்கள் மட்டும் இருக்கும்போதும் முக்காடு தேவையில்ல. செல்லக்குட்டி முக்காடு போடுவது ஒன்டும் கஷ்டமான விஷயம் இல்ல. அது எங்கள பல ஆபத்துகளில இருந்து காப்பாத்துற ஒரு கேடயமா தான் இருக்கு. பாவங்களில் இருந்து எங்கள காப்பாத்துற ஒரு ஆயுதமாகவும் இருக்கு. எங்களுக்கு பாதுகாப்பு தாரதாவும் இருக்கு. ஒரு பெண்ணுக்கு மிகவும் அழகையும் கவர்ச்சியையும் தாரது எது தெரியுமா? அவளுடைய தலை முடி தான். அதை மூடி வைக்கிறது தான் எங்களுக்கு பாதுகாப்பு தரும். அது மட்டும் இல்ல சாப்பிடும் போதும் வுழூ செய்யும் போதும் முக்காடு போட வேணும். அதுமட்டுமில்ல நாங்க அணியிற ஆடைகள் தளர்வான ஆடைகளா உடற்பாகங்கள் வெளிய தெரியாத வண்ணம் இருக்கக்கூடிய ஆடைகளா இருக்கணும் சரியா?

றிபாதா: சரி உம்மம்மா. இங்க பாருங்க. நான் இந்தா முக்காடு போட்டுட்டேன். எப்படி இருக்கு?

உம்மம்மா: மாஷா அல்லாஹ். என்ட பேத்தி அழகி. இந்த அழக பெரிய ஆபத்துல இருந்து காப்பாத்துற கேடயம் ஒன்ட நான் கொண்டு வந்து கொடுத்திருக்கன்.

றிபாதா: சரி உம்மம்மா நான் இந்த முக்காட வாப்பாகிட்ட காட்டிட்டு வரேன்.

உம்மம்மா: சரிம்மா போய் காட்டிட்டு வாங்க.

பரீதா.... நான் எடுத்து சொன்னதும் என்ட பேத்தி எவ்வளவு அழகா தெளிவா புரிஞ்சுகிட்டா. பிள்ளைகளுக்கு சின்ன வயசுலயே எல்லாத்தையும் சரியா சொல்லிக் கொடுத்துடணும். அப்பதான் அவங்க பெரியவங்களா ஆனாலும் வழி தவறி போக மாட்டாங்க. சின்ன வயசுலயே உலகக் கல்வியோட சேர்த்து மார்க்க கல்வியையும் ஊட்டி வளக்கணும் மகள்.

பரீதா: ஓ...

உம்மா உங்க அனுபவம் ரொம்ப பெருசு அதனால அழகா சொல்லி கொடுத்துட்டீங்க. இந்த நல்ல நாள்ல நல்ல காரியம் செஞ்சீங்க உம்மா. அல்ஹம்துலில்லாஹ்.

**ஜெஸ்மின் ரமீஸ்**

**காத்தான்குடி.**

## வெண் புறாக்களைத் தேடி



அச்சம் சூழ்ந்த காஸாவிலே/
துச்சமாகி உயிர் துடிக்க/
தேடுகிறேன் உன்னை வெண்புறாவே!

அங்கம் இழந்தோர் அங்கிருக்க புறாவே /
இங்கிருந்து உனக்கென்ன வேலை புறாவே/
எங்கிருந்தாலும்இவர்களுக்கெல்லாம் உத விட/
என் நெஞ்சம் சொல்லுதே புறாவே/



அவலங்கள் அழுகை கள்
நிகழுகின்ற நாழிகைகள்
நீண்ட பல ஆண்டுகளாக
நிலவுவதை அறிவாயா வெண்புறா வே.

இரக்கமில்லாத அரக்கர்களின்/
இழி நிலை கொடுமைகளை
பழி சொல்ல வைத்திடவே/
பதாதைகட்டிடுவேன்.
பார்முழுக்க பறந்து போய்
கூறிடவே உன்னை தேடுகிறேன்.

**பானு ஜிப்ரி**
**சாய்ந்தமருது.**



## எங்கள் ஊர்



முத்து குளித்த ஊராம்
மூதூரின் புகழ் பாடும்
வங்கக் கரைதனிலே
வசீகரிக்கும் சோலைகளாம்

மீனவமும் கமத்தொழிலும்
மானுடரின் குலத்தொழிலாம்
பார்க்கும் திசையெல்லாம்
பச்சை வயல் வெளியாம்

முஸ்லிம் இந்து பௌத்தம்
மூவினமும் ஒன்றுபட்டு

பல்கலையும் கலாச்சாரம்
பரவ இங்கே கிடக்குதம்மா

பலநூறு கதை பேசும்
புளியம் தரு ஒன்று எம்மூரில்
றொபட் நொக்ஸின் சரிதத்தை
சான்று பகருதம்மா

வெள்ளையனின் அடிச்சுவடாய்
வெடிக்காலம் கடந்த பின்னும்
கலங்கரை விளக்கமொன்று
காலூன்றி நிற்குதம்மா

ஏழு கடல் தாண்டினாலும்
எம்மூரை போலொன்று
எத்திக்கும் இல்லையம்மா
ஏகன் செய்த விந்தையம்மா

**ID தஸ்னீம்.**
**மூதூர்**

## எமது ஆளுமை



**கலாபூஷணம் அல்ஹாஜா**

**அரபா மன்சூர்.**

மத்திய மலைநாட்டின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள தெஹியங்க என்னும் அழகிய கிராமத்தில் எழுத்தாளர் பரம்பரையை சேர்ந்த, லேகம்லா கெதர அலி உதுமான் லெப்பெ ஸாரா உம்மா தம் பதியின் மகளாகப் பிறந்து வளர்ந்து அங்கேயே க. பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்று பேராதனை பல்கலைக்கழகம் நுழைந்து பட்டதாரியாகி மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் எம். ஏ பட்டமும் பெற்றவர். தற்போது கண்டி ஹீரஸ்ஸகலயை வசிப்பிடமாகக் கொண்ட அரபா மன்சூர் கல்வித்துறையிலும் கலைத்துறையிலும் சாதித்தவை அநேகம். இவரை எமது Srilanka Pen club இன் அவரி 10 இன் ஆளுமை பகுதிக்காக சந்தித்த வேளை...

1. **கலைஞர்களின் கனவாகிய கலாபூஷணம் விருதையும் அண்மையில் பெற்றுள்ள உங்களை வாழ்த்தி எமது அவரியின் ஆளுமை பகுதிக்கு வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களின் சிறுபராயம், பாடசாலை வாழ்க்கை பற்றி கூறுங்களேன்..**

   சிறுவயதிலிருந்தே கலைஇலக்கிய விடயங்கள் எனக்குள் இயல்பாகவே ஏற்பட்ட ஒன்று. நான் கல்வி கற்ற தெஹியங்கை அல் அஸ்ஹர் ம.வித்தியாலய (தற்போது கல்லூரி) ஆசிரியர்கள் எனது கல்வி, கலைப்பயணத்துக்கு தூண்டுகோலாக இருந்தனர்

2. **உங்கள் கலையுலக இலக்கியப் பிரவேசம் பாடசாலை காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. அது பற்றி அறிய ஆவலாக உள்ளோம்.**

   ஆம். எனது கலையுலக இலக்கியப் பிரவேசம் பாடசாலைக்காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது.முதலாம் வகுப்பில் படிக்கும்போதே எனக்குள் இருந்த ஆற்றல்களை எனது வகுப்பாசிரியை இனங்கண்டு என்னை வழிப்படுத்தியுள்ளார். நடனம். வாசிப்பு கதைகூறல். நாடகம். பேச்சு பாட்டு என்று ஒவ்வொரு மாணவர் மன்றத்திலும் எனது நிகழ்ச்சி களை மேடை ஏற்றுவார். பாடசாலைக் கல்வி நிறைவாகும் வரை எனது எல்லா ஆசிரியர்களும் எனது முன்னேற்றத்துக்கு உதவியதோடு ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கினார்கள். இடைநிலைப்பிரிவில் கற்கும்போதே ஓய்வு நேரங்களை விளையாட்டிலும். இலக்கிய முயற்சிகளிலும் ஈடுபடுத்திக்கொண்டேன். பத்தாம் தரத்தில் கற்கும்போது நாடகங்களை எழுதி நடித்ததோடு சிறியவகுப்பு மாணவர்களுக்கு நாடகங்களை எழுதி பயிற்றுவிக்குமளவுக்கு ஆசிரியர்கள் ஊக்குவித்தார்கள்.

   உயர்தரவகுப்பில். இளங்கதிர் என்ற கைஎழுத்துப்பத்திரிகை ஆசிரியராக இருந்து செயற்படுத்தினேன்.

   எந்த ஆசிரியரிடம் எதை கற்கலாம் என்பதை அறிந்து கொண்டு இலக்கியப்பயணத்தை தொடர்ந்தேன். எனது வானொலி அறிவிப்புத்துறைக்கும் அத்திவாரமிட்டவர்கள் எனது ஆசிரியர்கள். என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்

**3. நீங்கள் மாத்திரமன்றி உங்கள் பெற்றோர் மற்றும் மூதாதையரும் ஏதோ ஒரு வகையில் கல்வி இலக்கியத் துறைக்கு சம்பந்தப்பட்டவர்கள். அந்த வகையில் அவர்களின் ஒத்துழைப்பு உங்கள் இலக்கியப் பாதைக்கு வழி சமைத்ததா..**

ஆம். கண்டி ஶ்ரீராஜசிங்க மன்னனிடம் பணிபுரிந்த " பத்தே லேகம்" என்ற எழுத்தாளர் பரம்பரையின்12வது தலைமுறையை சேர்ந்தவர் நான். பாட்டனார்,தந்தையார் இருவருமே இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களை அரபுத்தமிழில் எழுதியுள்ளார் கள். புனித குர்ஆன் . உட்பட பல அரபுத்தமிழில் எனது தகப்பனார் எழுதியுள்ளார். அரச ,தனியார் நிறுவனங்களிலும். பள்ளி வாயில்கள்,மத்ரஸாக்களிலும் தந்தையார் எழுதிய அரபு உடட்பட, மும்மொழிப் பெயர்ப்பலகைகளை இன்றும் காணலாம். தாயாரும் அரபுத்தமிழில் இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்றவர்கள். ஆக்கப்பணிகளிலும் கைதேர்ந்தவர். ஸ்தாத் அமைத்தல் முதல் அரபு எழுத்தணி அலங்காரம். சித்திரங்கள் வரைதல் என்பனவற்றுக்கு நம்மையும் பழக்குவார். தகப்பனார் பத்திரிகை ஏஜன்ட்ஆகவும் பணியாற்றியவர். மும்மொழியிலான பத்திரிகைகள். சஞ்சிகை கள் . கதைப்புத்தகம் வாங்குவது வழக்கம். சத்தமிட்டு வாசிக்க செய்வார். நிறுத்தற் குறிகளை அனுசரித்து வாசிக்கவேண்டும் பிழைத்தால்,திரும்பவும் வாசிக்கவேண்டும். குர்ஆன் ஓதுவதிலும் அப்படித்தான். உம்மா அரபுத்தமிழ் இலக்கியங்களை வாசிக்கத்தருவார்.. வரலாற்றுகதைகளை சொல்லித்தருவார். வானொலி நிலையத்துக்கு வாப்பா என்னை அழைத்துச் சென்று எனது நிகழ்ச்சி முடிந்ததும் கூட்டி வருவார். பெண்பிள்ளைகளும் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று கல்வி கலை கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு பெற்றோர் அழைத்துச் சென்றார்கள். வீட்டில் கலை இலக்கியச்சூழல் காணப்பட்டதனால் பெற்றோரின் ஒத்துழைப்பும் நிறையவே இருந்தது.

**4. ஒரு ஆசிரியையாக உங்கள் பயணத்தை ஆரம்பித்து பின் பாலர் பாடசாலை பயிற்றுவிப்பாளராக பாடசாலை உயர் பிரிவின் தலைவியாக ,பிரதி அதிபராக இருந்து ஓய்வு பெற்றுள்ளீர்கள். அதைத் தாண்டி உங்களின் பங்களிப்புகளை அறிய ஆவலாக உள்ளேன்..**

ஆம் முதலில் பாலர்பாடசாலை ஆசிரியராக. பாலர்பாடசாலை ஆசிரிய பயிற்றுவிப்பாளராக. இருந்து நாட்டின் பலபாகங்களிலும் தமிழ்மொழிமூல பாலர்பாடசாலைகள் உருவாக காரணமாக இருந்ததோடு பயிற்சியின்போது மாணவிகளுக்கு சுயதொழிற்கல்வி, பெண் ஜனாஸா குளிப்பாட்டி கபனிடும் பயிற்சி. மணப்பெண் அலங்காரம். பத்திக். தையல். பின்னல். மனைநிர்வாகம் என்று நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக பயிற்சிகளும் வழங்கினேன். தமிழ்ப்பாடஆசிரியராக உயர்தரப்பிரிவு பகுதித் தலைவியாக. உயர்தரப்பிரிவு உப அதிபராக கடமை புரிந்ததோடு , க. பொ.த உயர்தர தமிழ்ப்பாட பரீட்சை விடைப்பத்திர மேலதிக

பிரதம பரீட்சகராகவும் 34ஆண்டு கள் கல்விப்பணி புரிந்துள்ளேன்அதிபர் ஆசிரியர்களது பங்களிப்புடன். மாணவர்களுக்கான உயர்கல்வி க்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிந்தது. ஊடகப்பிரிவின் பொறுப்பாளராகவும் கடமை புரிந்தேன். ஆசிரியப்பணியில் கால்பதித்த நாளிலிருந்து தமிழ் மன்றப் பொறுப்பாசிரியராக இருந்து பணியாற்றியமை இறைவன் அருளால் ஆவலோடும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்ட மாணவர்கள் பலர் இன்று ஆசிரியர்களாக. அதிபர்களாக. வைத்தியர்களாக. பொறியியலாளர்களாகவும் இன்னும் பல்வேறு தொழிற்துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளமை மகிழ்ச்சி யான விடயமே. . கல்விக்கான ஒத்துழைப்பு விடயங்கள். ஊடக பங்களிப்பு. கல்விநல சேவைகள். இலக்கிய .இஸ்லாமிய நிகழ்வு களில் பாடசாலைகளுக்கு பங்களிப்பு செய்துள்ளேன்

5. **இலக்கியத் துறையில் உங்களின் சாதனைகள், நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி பகிர்ந்து கொள்ளுங்கள்..**

இலக்கியத்துறையில் தினகரன்,வீரகேசரி, சிந்தாமணி, நவமணி, தினக்குரல்,எழுச்சிக்குரல், நேசன் பத்திரிகளிலும். பிறை நிலா.தாமரை, குன்றின்குரல், தளிர்,அல்உஷ்ரா,முதலிய பல்வேறு சஞ்சிகை களிலும் கவிதைகள் கட்டுரைகள். வரலாறுகள், சிறுகதைகள், ஆய்வுக்கட்டுரை கள் என நிறையவே எழுதி வெளிவந்துள்ளன. வானொலி நாடகங்கள். சிறுகதைகள்,கவிதைகள்,உரைச் சித்திரங்கள்,என்பன எழுதி ஒலிபரப்பாகின. சக்தி தொலைக்காட்சி. ரூபவாஹினி நேத்ரா அலைவரிசையிலும் நான் எழுதி தயாரித்த நாடகங்கள் எனது மாணவர்களை நடிக்கவிட்டு ஒளிஒலிபரப்பாயின. அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற குறுந்திரைப்படமும் எழுதி தயாரித்து எனது மாணவர்களை நடிக்கவைத்து வெற்றியீட்டியமை குறிப்பிடத் தக்கது. தமிழ்தினபோட்டிகள் . கலாசார போட்டிகள் என்பவற்றில் நாடகங்கள். வில்லுப்பாட்டு பிறைப்பாட்டு இசைச்சகத்திரம் என்று பல்வேறு அம்சங்கள் எழுதி தயாரித்து மாணவர்களை பங்கைற்க வைத்து வெற்றிகள் பெறச்செய்துள்ளேன். உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் தாளலயம், பிறைப்பாட்டு என்பவற்றை தயாரித்து மேடை ஏற்றினேன். ஒரே தினம் கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் சுமார்150 மாணவ்கள்எழுதிய நூல்களை மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தினூடாக பேராதனைப் பல்கலைகழகத்தில் வெளியீடு செய்து மாணவ எழுத்தாளர்களை உருவாக்கும் வாய்ப்பு கிடைத்தது.

பாடசாலை இலக்கிய சஞ்சிகை களான இளங்கதிர்,கலைக்கதிர்,மஹ்மூத் மலர், முத்தமிழ் நாதம்,Down of Mahmudians, அவரி7 முதலான 12க்கு மேற்பட்ட சஞ்சிகை களின் இதழாசிரியராக செயற்பட்டுள்ளேன். நூல் விமர்சனங்கள்,விழிப்புணர்வு செயலமர்வுகள். கவியரங்குகள். இலக்கியச்சொற்பொழிவுகள் . நிகழ்ச்சித் தொகுப்புகள் என பல பாடசாலைகளிலும் இலக்கிய மேடைகளிலும் நிகழ்த்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கண்டி சித்தி லெப்பை கல்லூரி. கட்டுகஸ்தோட்டை ஸாஹிரா ஆண்கள் கல்லூரி என்பவற்றின் தமிழ் சிங்களமொழியிலான பாடசாலைக்கீதங்கள் என்னால் இயற்றப்பட்டு இசையமைத்துக்கொடுக்கப்பட்ட வையே. இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சி தேர்வு செய்து பயிற்றப்பட்ட கலைஞராக செயற்பட்டதோடு பயிற்றப்பட்ட பகுதிநேர அறிவிப்பாளராக கந்துரட்ட எப் எம் மலையக சேவையில் கடமைபுரிந்துள்ளேன். மங்கையர் நிகழ்ச்சி தயாரித்து வழங்கியுள்ளேன். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சி மாதர் மஜ்லிஸ் பிரதி எழுதுபராகவும். குரல் கொடுத்துமுள்ளேன். எழுச்சி குரலில் பாலர்கல்வி தொடர்பான தொடர்கட்டுரை வெளியிட்டுள்ளேன். பெண்இலக்கிய மாநாடுகளில் கலந்து ஆய்வுக்கட்டுரை சமர்பித்தல்.
பாடுபாப்பா கதைகேளுபாப்பா. வண்ணத்துராணி. மிக்கி, உண்டு வாழ்வு . கிட்டிபோய் மும்மொழி சிறுவர்கதை. மனிதம்கண்டேன் கவிதைத்தொகுப்பு . உழைக்கப்பிறந்தவர்கள்.

வெற்றி கள் பற்றி குறிப்பிடும்போது ஹிஜ்ரிவிழா. பேச்சு அரபு எழுத்தணி . இஸ்லாமிய தின நிகழ்வு களில் கவிதை பேச்சு சிறுகதை. இவ்வாறு எண்ணிறைந்த போட்டி வெற்றிகள்.
மகாரத்மல சிறந்த அறிவிப்பாளர் விருது.
இரத்தினதீப விருது.தேசாபிமானி விருது. குருபிரதீபா பிரபா சிறப்பு ஆசிரியர் விருது.
உலகஇஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் இலக்கிய விருது.
கலாபூஷண விருது .
விழித்தெழு பெண்ணே
கனடாவின் சர்வதேச விருது
என்பன கிடைத்துள்ளன.

**6. தற்போது நீங்கள் அங்கும் வகிக்கும் இலக்கிய அமைப்புகள் குழுக்கள் பற்றிய விபரங்களை கூறுங்களேன்..**

தற்போது ஸ்ரீலங்கா பென்கிளப் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின் வட்சப் நிகழ்ச்சி கட்டுப்பாட்டாளராக செயற்படுகின்றேன்.
தெஹியங்கை பெண்கள் ஊடக அமைப்பு. கண்டி மக்கள் கலைஇலக்கிய மன்றம். மலையக கலை கலாசார சங்கம். கண்டி பிரதேச கலை இலக்கிய அமைப்பு. நூலக வாசகர் வட்டம். கல்வி மறுமலர்ச்சிக்குழு. மங்கையர் மஜ்லிஸ். அவரி சஞ்சிகைக்குழு. சிறகின்மொழி கவிதைக்குழுமம் என்பவற்றில்இணைந்து செயற்படுகின்றேன்.

**7. ஒரு குடும்பத் தலைவியாக இருந்து கொண்டு தொழில், கல்வி, கலை இலக்கிய பயணம் தொடர்வதற்கான உங்கள் குடும்ப ஒத்துழைப்பு எவ்வாறு உள்ளது.**

திருமணத்துக்கு முன்னர் பெற்றோரின் வழிகாட்டல் ஒத்துழைப்பு நிறையவே கிடைத்தது. திருமணத்துக்கு பின்னர் கணவரின் வழிகாட்டலும் ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் பிள்ளை களின் ஒத்துழைப்பு ம் இருப்பதனாலேயே என்கல்வி கலை இலக்கியப் பயணத்தை செவ்வனே நடத்திச்செல்ல முடிகிறது . கணவர் சீ.எம்.எம். மன்சூர் கல்வி நிர்வாக சேவை சித்திபெற்ற கல்விப்பணிப்பாளராக இருந்தவர். அறிஞர் சித்தி லெப்பை யின்

பரம்பரையை சேர்ந்தவர்என்பதையும் குறிப்பிட வேண்டும்.

**8. இறுதியாக, இன்றைய கால கட்டத்தில் எமது இளைய சந்ததிகள் பலரும் இலக்கியம் படைக்க களமிறங்கி உள்ளனர். களங்களும் நிறையவே உண்டு. அவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

இளையசந்ததியினர் இலக்கியத்தின் பக்கம் படர்ந்துவருவது வரவேற்கத்தக்கது. ஆனால் சிலர் சமையல் குறிப்பை கொப்பிபண்ணிபோடுவோரும் எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்வது வேடிக்கையாக உள்ளது. அடுத்தவர் ஆக்கங்களை திருடி ,மாற்றங்கள் செய்து,தமது பெயரில் எழுதுவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். இப்படி எழுதுகின்ற இளம்சந்ததியினர் இருக்கிறார்கள். பெயர் வரவேண்டும் என்பதற்காக எதையும் எழுதி ஆக்கத்தை கொச்சைப்படுத்துவதை தவிர்க்கவேண்டும். எழுத முன் சிந்தித்து பொருத்தமான இலக்கியங்களை படைக்க வேண்டும். எழுத்தாளராக பரிணமிக்க முன்னர் நிறைய வாசிக்க வேண்டும். இரண்டு வசனத்தை வரிசைப்படுத்தி கவிதை எழுதிவிட்டேன் என்று மார்தட்டிக்கொள்ளாமல் . முதலில் கவிதைகளை வாசித்து இரசித்து நயந்து கொள்ளவேண்டும். ஒவ்வொரு இளைய எழுத்தாளனும் ,நான் யார்?யாருக்காக எழுதுகிறேன்?ஏன் எதை எப்படி என்பதை புரிந்து கொண்டு அடுத்தவன் கற்பனை யை கடன்வாங்காமலும். திருடாமலும் . படிப்பினை தரக்கூடிய தரமான இலக்கியங்களை படைக்கவேண்டும். தன்னம்பிக்கையோடு எழுத வேண்டும். புகழை தேடி ஓட வேண்டியதில்லை புகழ் நம்மைத் தேடி வரும்.

பெண்ணானவள் பிறந்தது முதல் குழந்தையாக மகளாக மனைவியாக தாயாக என குடும்பத்திலும் தா

பின் ஆசிரியராக, அதிபராக, இலக்கியவாதியாக பிரகாசித்துள்ளீர்கள். உங்கள் இலக்கிய பயணம் சர்வதேச ரீதியாக பேசப்பட வேண்டும். இன்னும் பல படைப்புகளை எமது சமூகத்திற்கு தர வேண்டுமென கூறி எமக்காக நேரத்தை ஒதுக்கி பொறுமையாக பதில் அளித்த உங்களுக்கு எமது ஸ்ரீலங்கா பென் கிளப் சார்பில் நன்றியும்,வாழ்த்துக்களும் கூறி விடைபெறுகிறேன். அஸ்ஸலாமு அலைக்கும், வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்



**செவ்வி கண்டவர்**

**ஷாமென் நிஸாம்டீன்**

# வகுப்பறைக்கு வெளியே..



"முதலாம் வகுப்புல எப்படிக் கொண்டுபோய் உட்டோமோ அப்படியே தான் இப்பவரைக்கும் என் பிள்ளை இருக்கான்.." என்று கொஞ்சம் கலங்கிய கண்களுடன் அந்தப் பெண் சொன்னதைக் கேட்டபோது உண்மையில் மனசு பதறிப்போய்விட்டது எனக்கு.

எமது வலயக்கல்வி அலுவலகத்தால் மேற்கொள்ளப் பட்டுவரும் ஒன்பதாம் வகுப்பில் இருக்கும் எழுத வாசிக்கத் தெரியாத மாணவருக்கென தயார்செய்யப்பட்ட செயற்றிட்டம் ஒன்றில் 8 மாணவர்களை இணைத்து இருந்தேன்.ஏறத்தாள நான்கு மாதங்களின் முடிவில் 6 மாணவர்கள் ஓரளவு எழுத வாசிக்கத் தொடங்கி இருந்தனர்.

ஆனாலும் வரவில் ஒழுங்கின்மையாக இருந்த இரண்டு மாணவர்கள் இன்னமும் முழுமையான தேர்ச்சியை அடைய வில்லை.

அந்த மாணவர்களுடைய  வீடு சென்று பெற்றோரைச் சந்தித்து, அவர்களின் கல்விநிலை,வீட்டுச் சூழல்,வீட்டில் படிக்கும்முறைகள் தொடர்பில் உரையாடி அப்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்திருந்தேன்.

எமது பாடசாலைக்கு அண்மையில் தான் அவர்கள் இருவரின் வீடும்.

பிரதான பாதையில் கடல் பக்கமாய் அதில் ஒருவரின் வீடு.

கூடவே எமது பாடசாலையில் கற்பிக்கும் இன்னொரு ஆசிரியையும் அழைத்துக் கொண்டு சென்றிருந்தேன்.
அங்கு நடந்த உரையாடலில்தான் அத்தாயார்  மேலே குறிப்பிட்ட இந்த விடயத்தைச் சொன்னார்.

அந்த மாணவன் தொடர்பில் தாயார் சொன்னது முற்றிலும் உண்மை.

அம்மாணவனுக்கு உயிரெழுத்துக்களைக் கூட முழுமையாக நினைவில் வைத்திருக்க முடியவில்லை.

சொல்லப்போனால் அவரும் ஒரு விசேடகல்வித்தேவை கொண்ட மாணவர் போலதான் பாடங்களை விளங்கிக் கொள்வதில் சிரமங்களை மேற்கொள்கிறார்.

நானும் அவரிடம் கொஞ்சமேனும் மாற்றத்தைக் கொண்டு வந்து விடவேண்டும் என்றுதான் இத்துணை முயற்சிகளும் செய்து கொண்டு இருக்கிறேன்.

என்றாலும்,அந்தத் தாயிடம் இதையெல்லாம் டக்கென்று சொல்லி அவரின் மனசை மேலும் புண்படுத்தாமல் "இல்லைமா அப்படிச் சொல்லாதீங்க..அவர் ஓரளவு முன்னேறி இருக்கார்.எப்படியும் இன்னமும் மூணு மாதத்திற்குள் நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து விடலாம்" என்றவாறு அவர்களின் குடும்பச் சூழ்நிலைகளை மெதுவாகக் கேட்டறியத் தொடங்குகிறேன்.

இந்த மாணவன்தான் அவர்களுக்குக் கடைசிப் பிள்ளை.ஒரு மகன் வளைகுடா நாட்டுக்கு வேலைக்குச் செல்வதற்காக அலைந்து கொண்டிருக்க,.
இன்னொருவர் கரவலை இழுப்பதில் ஆர்வங்காட்டியபடி கடற்கரையிலே தவங்கிடக்கிறார்.

இவர்களின் ஒரே மகள் திருமணம் முடித்துப் பக்கத்துத்தெருவில் வசிக்கின்றார்.

தாயார்தான் தன்வீட்டிலும் ,மகள் வீட்டிலுமாய் மாறிமாறி வீட்டுவேலைகள் செய்து கொண்டிருக்கிறார்.

இவ்வளவு பரபரப்பிலும் இளையமகனின் படிப்பு தொடர்பில் அக்கறை கொள்ள அந்த வீட்டில் உள்ள யாருக்கும் நேரமில்லை .

வீட்டிலும் அவருக்கென்று படிக்க தனி மேசை ,கதிரை ஒன்றையும் காணவில்லை.

இருந்த ஒரே மேசையைப் பெரிய தொலைக் காட்சிப்பெட்டி ஒன்று முழுமையாய் ஆக்கிரமித்து இருந்தது.

இளையமகன் படிக்க என்று தனிப்பட்ட முறையில் எந்த முயற்சியும் இவர்கள் செய்யவில்லை என்றே எனக்குப் பட்டது.

அப்படி மகனில் கல்வியில் எந்த அக்கறையும் இல்லாமல் இருந்து கொண்டு எப்படி இந்த வசனத்தைச் சொல்ல முடியும் என்று லேசாய் கோபமும் வந்தது.
தந்தையோ ஆட்டோ ஓட்டுபவர்.படித்தவர்போலத் தெரிந்தார்.ஆனாலும் காலையில் நல்ல வடிவாக வெளிக்கிட்டுப் போனால்,இனி சாப்பாட்டு நேரம் மற்றும் பிறகு இரவில்தான் வீட்டுக்கு வருவாராம். (இதைத் பிழை என்று சொல்ல வரவில்லை.மகனைக் கவனிக்காமல் இருக்கிறாரே என்ற ஆதங்கம் மட்டும்.) நாங்கள் வந்த காரணம் கேட்டு,மகனின் சில பழக்க வழக்கங்கள் தொடர்பில் தனது அதிருப்தியையும் வெளிக்காட்டி விட்டுப் பள்ளிக்கூடம் ,மற்றும் இதுவரை தன் மகனுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் தொடர்பில் சில குறைகளையும் அடுக்கிக் கொண்டே போனார்.
போதாததுக்கு தன் தம்பி அந்த யூனிவர்சிட்டி.. அண்ணன் இந்த யூனிவர்சிட்டி..என்ற பழம் பெருமைகள் பேசிக்கொண்டபடி.

ஒரு பிள்ளையின் சிறந்த கல்விக் பெறுபெறுபேற்றுக்குள் அந்தப் பிள்ளையின் தனிமுயற்சி மட்டும் இன்றி பெற்றோர், ஆசிரியர், பாடசாலை நிருவாகம், குறித்தகுடும்ப உறுப்பினர் என எல்லோரினதும் பங்களிப்புகளும் அவசியம் என்பதை நானும் கூட வந்த ஆசிரியையும் மாறிமாறி அவர்களுக்கு விளக்கினோம் .

பாடசாலைக்கு இடைக்கிடை வராமல் கடலோரம் கரவலை இழுக்கும் நேரம் மீன் பொறுக்குதும், மற்றும் அயல் வீட்டாருக்கு சிறுசிறு வேலைகள் செய்து கொடுத்து காசு வாங்குவதும் என்று நேரம் கழிக்கும் மகனை விரட்டியாவது பள்ளிக்கூடம் அனுப்பத் தெரியவில்லை .

இரவு முழுக்கத்தொடர் நாடகங்களில் மூழ்கிக் கிடக்கும் நேரம் தன்பிள்ளை வீட்டுப் பாடங்கள் படிக்கிறானா பயிற்சிகள் செய்கிறானா என்று அவதானிக்க விருப்பமில்லை.

வகுப்பறையில் மாதத்தில் ஒரு தடவை நடைபெறும் பெற்றார் கலந்துரையாடலில் பங்கு கொண்டு தன் பிள்ளை தொடர்பில் ஆசிரியர் சொல்லும் குறைநிறைகளைக் கேட்டு அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க எந்த ஆர்வமும் ஈடுபாடும் இல்லை.

ஆனாலும் என்ன வடிவாக இவர்களால் பள்ளிக்கூடத்தையும் படிப்பித்த ஆசிரியர்களையும் மட்டும் குறைசொல்லித் தப்பிக் கொள்ள இவ்வாறான பெற்றோர்களால் முடிகிறதென்று எங்களுக்குள் நாங்களே முணுமுணு த்தபடி மிகக் கவலையோடு நானும் என் ஆசிரியத் தோழியும் அங்கிருந்து கிளம்புகிறோம் .

**எஸ். ஃபாயிஸா அலி**
**கிண்ணியா.**

# கொடிக்குத் திரும்பாத மலர்

கீழ் வானம் குங்குமக் கன்னமாய்ச் சிவந்திருக்க ,மலர்களை இதழ் விரியச்செய்த படி மேகங்களுக்கு நடுவே உதிக்க ஆரம்பித்திருந்தான் உதய சூரியன்.

இரவு பெய்த மழையில் நனைந்திருந்த பூமித்தாயின் மடியில்....
மகிழ்வுடன் சொரிந்திருந்தன முற்றத்து மல்லிகைப்பந்தலிலிருந்த மல்லிகைப் பூக்கள்.
ஜன்னலோரத்தில் நின்ற வாறே காலைநேரத்துத்தென்றல் இனிமையாக மேனியைத்தொட்டுச்செல்லும் சுகத்தைக்கூட அறியாதவளாக , சிந்தனை வயப்பட்டிருந்தாள் இல்மா....

அங்கே... பதினொரு வயதே நிரம்பிய அழகிய மகள் ரொனா பேகம்...
,இளமையின் பூரிப்பு எட்டிப்பார்க்கத்துடிக்கும் அழகிய மொட்டாக... வாசலில் நட்டிருந்த ரோஜாச்செடிகள், எக்ஸொராச் செடிகளுக்கு இடையில் களை பிடுங்கி... பாத்தி அமைத்துக்கொண்டிருந்தாள்.

இவ்வளவு இல்லாமையிலும் இவளுக்கு கலர்கலராப் பூக்கள் பூக்கும் பூச்செடிகள் மட்டும் வாங்கிக்கொடுத்து விட வேண்டும்.

இல்லையேல் இல்மாவை படுத்தி எடுத்து விடுவாள்.
அங்கே வரும் வண்ணத்துப்பூச்சிகளுடன் அவளும் விளையாடி மகிழ்வதைப்பார்க்க சந்தோசமாக இருப்பதால்... அவள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விடும்.

மகளைப்பார்த்துக்கொண்டு சிந்தனையிலாழ்ந்திருந்த இல்மாவிடம் வந்த அவளது தாயார்...



" என்ன மகள் ...நீங்க இன்னும் எந்த முடிவும் சொல்லல்லையே..".."என்ற கேள்வியில் அதிர்ந்தவளாக இல்மா. குழம்பிய மனநிலையில் தாயை

பரிதாபமாகப்பார்த்தாள். புரிந்து கொண்ட அந்த வயோதிபத்தாயாரோ ,...

"எத்தனை காலம்தான் இப்படியே இருக்கப்போறீங்க மகள் ...நானும் இந்தச்சிறு தொகைப். பென்சன் பணத்தில் உங்களையும் ரொனாவையும் வைத்து எப்படி ...சமாளிக்கிற...சகோதரசகோதரிகளின் உதவியும் பெரிதாக கிடைப்பதில்லை ...தெரியும் தானே....அத்தோடு இளமையான உங்களையும் மலரத்துடிக்கும் மொட்டான ரொனாவையும் பாதுகாப்பது எப்படி"

....என அடுக்கிக்கொண்டே ஆதங்கப்பட்ட தாயை வெறுமையாகப்பார்த்தாள் இல்மா.

தனது சகோதரர்கள் அடிக்கடி மாப்பிள்ளை பேசி வருவதும்
அதை ஏதோ காரணம் சொல்லி இல்மா தட்டிக்கழிப்பதும் இங்கே அடிக்கடி நடக்கும் நிகழ்வுகள்தான்.

இப்போதும் மனைவியை இழந்த ஒரு ஆசிரியரை சகோதரர்கள் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.
அதைப்பற்றித்தான் இல்மாவின் தாயார் மகளிடம் கேட்கிறார்.

இன்னொரு வாழ்வில் தனக்கும் ,மகளுக்கு மான "லவ் என் கேயாரிங்"கிடைக்குமா?...என்பது இல்மாவின் உள்ளத்துக்கிடக்கை.

பக்கத்து வீட்டு வானொலியில் "எறும்பு ஊருது என்று ...கன்னம் தடவும் சில பேர் ."..

என்ற பாடல் வரிகள் மெலிதாக எதிரொலித்துக்கொண்டிருந்தது. வெளியே... மொட்டுக்களோடு மொட்டாக ... மலரத்துடிக்கும் மகள். இங்கே இளம் விதவையான இல்மாவின் வாழ்வோ.... என்றோ மலர்க்கொத்திலிருந்து தூக்கிவீசப்பட்ட வாடி வதங்கிய ரோஜாவாக...இதற்கெல்லாம் விடிவு காலம் இனிப்பிறக்குமா????
விடை காண முடியாத பல கேள்விகள் அவளுக்குள்ளேயே புதைந்து போய் விடுவது இப்போதெல்லாம் பழகிவிட்டது.

மனம் விட்டு பேசி நீண்ட நாட்களாக விட்டது .யாரிடம் பேசுவது? அன்பான, நட்பான தனது துணையை இழந்ததன் பின்னர், நம்பிக்கையாக பேசுவதற்கு யார் இருக்கிறார்கள்?

மனதில் உள்ளவற்றை வெளிப்படையாக பேசினால் அதை பலவாறாக சித்தரித்து, மீண்டும் அவளிடமே அவள் வார்த்தைகள் பல ரூபங்களில் வந்து சேரும்....

இயல்பிலேயே சிரித்த முகமாக கலகலப்பாக பேசும் இல்மா ... இப்போது ஊருக்கும்,உறவுக்கும் பயந்து ... பேசா மடந்தையாகித்தான் போனாள்.

அலுத்து போய்விட்டது. இப்போதெல்லாம் மௌனமே இல்மாவின் மொழியாகி விட்டது.

சுயம் இழக்கப்பட்ட நிலையில்... இன்றைய இளம் விதவைகளின்வாழ்வு சமூகத்துடனான போராட்டங்களாகிப் போன அவல நிலைதானே இன்றைய நிதர்சனம்.

தாயாரின் பரிதாபமான முகத்தைப் பார்த்த இல்மா...

"அப்பமும் , டீயும் மூடி வைத்திருக்கிறேனே.. சாப்பிட்டீங்களா ம்மா" ...என அன்போடு தாயைப் பார்த்து கேட்டாள்.

மகளின் பரிவில் கண் கலங்கிய தாயாரும், "ஆமாம் ரொனாவுக்கும் வைத்திருக்கிறேன்
.
அவ காலையில் டீ மட்டும் தானே குடிப்பா. லேட்டா தானே சாப்பிடுவா."

என்று கூறிய தாயாரிடம் ...
"சரி ம்மா மிளகாய்த்தூள் மஞ்சள் தூள் எடுக்க ஆசியத்தும்மா வருவாங்க.
நான் பக்கெட் போடப் போகிறேன்."

எனக் கூறிவிட்டு மெதுவாக முன்னறைக்கு சென்றாள் இல்மா.

இப்போதைக்கு ஏதோ சொல்லி சமாளித்தாயிற்று. ஆனால் இன்று ஞாயிற்றுக்கிழமையல்லவா? எப்படியும் நானாமார் இருவரும் மாப்பிள்ளை பேச்சை எடுத்துக் கொண்டு வருவார்கள்.
இது பற்றி மீண்டும் வீட்டில் டிஸ்கஷன் ஆரம்பிக்கும்.தாயாரின் அழுகையுடன்.... கடைசியில் எப்போதும் போல இல்மாவுக்கேகே குத்தல் பேச்சும் , திட்டுக்களுமாய் ....பழகி விட்டது அவளுக்கு.
அகம்பாவக்காரி ...ஆணவக்காரி என்ற பட்டங்களும் அழையா விருந்தாளியாக நுழைந்து கொள்ளும்.
தன்னை யாருமே புரிந்து கொள்ள மாட்டார்களா??? எல்லோருக்கும் இருப்பது போல எனக்குள்ளும் இரத்தமும் தசையுமான ஒரு உயிர் துடிப்புள்ள இதயமும் இருக்கின்றதே. என்பது அவளது ஏக்கம் நிறைந்த எதிர்பார்ப்பு ...
விதவையானால் அது மரத்துப் போய்விடுமா?? என்று விடை காணா வினாக்களோடு சிறிய வருமானத்துக்காக இடித்து வைத்திருக்கும் மிளகாய் தூள், மஞ்சள் ,தூள் மிளகு தூள் எல்லாவற்றையும்

250 கிராம், 100 கிராம் ,50 கிராம் என சிறு சிறு பொதிகளாக நிறுத்து மடிக்க தொடங்கி விட்டாள் இல்மா.

ஆனால் என்னதான் கைகள் வேலை செய்தாலும், மனதோ... நூலறுந்த பட்டம் போல தாறுமாறாய் பறந்து தவித்தது.

விதவையான அவளது அழகும் இளமையும் ஒரு சாபக்கேடா???
என்ற கேள்வி அவளது மனதை மிகவும் தாக்கியது.
உறவுகளுக்குள்ளேயே சுதந்திரமாக நடமாட முடியவில்லை. கண் முன்னே உறவுகள் மிக அழகாக வரவேற்று... பரிதாப கீதம் பாடி ...கண்களில் ஈரம் கசிய பேசி ஆதரித்து அனுப்பிவிட்டு,

அடுத்த நொடியே... போட்டிருக்கும் உடுப்பு பற்றியும் கையில் வைத்திருக்கும் போன் ஃபேஸ் பற்றியும் கழுவி, கழுவி ஊற்ற ஆரம்பித்து விடுவார்கள்.

இது எப்படியோ பாசமான உறவுகள் மூலம் சில தினங்களில் இல்மாவுக்கு வந்தடையும்போது அவள் அடையும் வேதனையோ கொஞ்ச நஞ்சம் அல்ல. அன்பான உறவுகள் என்று யாரை எண்ணிக் கொண்டிருக்கிறாளோ ... அவர்களிடம் இருந்தா ?இப்படியான பேச்சுக்கள் .. என ஆச்சரியப்பட்டு போவாள்.

உறவுகளிடம் செல்லவே அவளுக்கு அச்சமாக இருக்கும் .

கொடிது,... கொடிது.. இளமையில் வறுமை கொடிது.

என்பது போல....
இங்கே இளமையில் விதவைக் கோலம் ...அதை விட பல மடங்கு கொடியது.
என்பது...
பேசுவோரை விட....
அனுபவிப்பவர்களுக்கே.. அதிகம் புரியும்.

"இல்மா ...மகள் இல்மா ...
மசாலா தூள் போட்டு முடிஞ்சாமா? எட்டு முப்பது பஸ்சுக்கு வானாறு, சூரங்கல் பகுதிக்கு இன்று கொண்டு போக வேண்டும் ."

எனக் கூறிக்கொண்டு திண்ணை படியில் உட்கார்ந்தார் ஆசியத்தும்மா.

"ஓ... வேலை முடிந்து விட்டது ம்மா ... இருங்க ஸிப் பேக்கில் போட்டு மூடி தருகிறேன்."

எனக் கூறிக் கொண்டே, இலகுவாக தூக்கிக் கொண்டு செல்லக்கூடியவாறான ஒரு ட்ரவலிங் பேக்கில், மசாலா தூள் நெடி தாக்காதவாறு நியூஸ் பேப்பரை மேலால் தடிப்பமாக போட்டு
ஸி ப்பை மூடிவிட்டாள் இல்மா.

பழைய கணக்கு விவரம் பார்க்க, பேப்பர் பேனாவோடு வந்தவள் ஏதோ உணர்ந்தவளாக ....
"
ஏன்மா ...ஏதாவது சாப்பிட்டீங்களா? "
என அன்போடு வினவினாள்.

இல்மாவின் அன்பை அடிக்கடி அனுபவிப்பவளான அந்த ஏழை பெண் ஆசியத்தும்மாவோ ...
"
இல்லம்மா .. சுபஹு தொழுதிட்டு கோப்பி மட்டுமே தாம்மா குடித்தேன்"

என்றார் .

உள்ளே போய் அப்பமும் , டீயும் எடுத்து வந்து கொடுத்துவிட்டு"
ஏம்மா ...
வயதான காலத்தில ஒன்றும் சாப்பிடாம பஸ்ல பயணம் எல்லாம் போகக் கூடாதும்மா.... சாப்பிடுங்க"
என்றாள்.

பின்னர் "ஏம்மா .. உங்க பிள்ளைகள் வந்தார்களா?"
என கேட்டாள்.

"இல்லம்மா... எல்லோருக்கும் அவங்க, அவங்க வீட்டிலேயே ஏதோ வேலை."

"!வருவாங்க..
இரவில் சில நேரம் வந்து பார்த்துவிட்டு போவாங்க.
. நான் தனி ஆள் தானேம்மா பிரச்சனையில்லை .

பகல் வியாபாரத்திற்கு போற இடங்கல்ல ஏதாவது வாங்கி சாப்பிட்டுக் கொள்வேன். இரவு தான் சமையல்"

என்றார் .
"உங்க மகள் எங்கே மா "
என வினவினாள் இல்மா.

" மருமகன்ட ம்மாவுக்கு சுகம் இல்லைதானே அங்கே நிரந்தரமாக இருக்க கூட்டி போய்விட்டார்.
வாதம் வந்த தாயாரை மருமகன் நன்றாக பார்த்துக் கொள்கிறார். அத்துடன் எனது மகளையும் மிகவும் அன்பாக பார்த்துக் கொள்கிறார். அவளும் ஆறு. மாதம் கர்ப்பம்மா"
என சந்தோஷமாக கூறினார்.

"சரிம்மா ....
நீங்கள் இரண்டாவது கல்யாணம் செய்தீர்களே!....
சந்தோஷமா தானே இருந்தீர்கள்.
பின்னர் ஏன் அவரை விட்டு பிரிந்தீர்கள் "?என மெதுவாக விசாரித்தாள் இல்மா.

ஆசியத் தும்மாவின் முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்ததுடன் இவளிடம் கூறலாமா?... இளம் விதவையான இவளும் இரண்டாம் திருமணத்திற்கு உறவுகளால் நிர்ப்பந்திக்கப்பட்டுக் கொண்டிருப்பவள் ஆச்சே,.... என ஒரு நிமிடம் யோசித்தார்.

பின்னர் பூஞ்செடிகளுக்குள் குனிந்து வேலை செய்து கொண்டிருந்த அழகிய மொட்டான, ரொரோனாவைப் பார்த்தவர்....
ஒரு நீண்ட பெருமூச்சுடன் தனது கதையை கூறத் தொடங்கினார்.

"அது வந்தும்மா... எனது இளமையும்,அழகும் நிறைய பேரை ஈர்த்தது என்னவோ உண்மைதான்.
பலர் விதவையான என்னை திருமணம் செய்யவும் முன் வந்தனர்."

"வயதுக்கு வந்த மகளுடனும், இரண்டு மகன்களுடனும் என்னை திருமணம் முடிக்க முன் வந்தவர்களுள்... கொஞ்சம் வசதியில் கூடிய ..சலீம் ஹாஜியார் தான் எனக்கு சரியாக பட்டது. நானும் அவரை திருமணம் முடித்தேன்.

நான் நினைத்தது போலவே,... உணவு, உடை நகை என வசதிக்கு பஞ்சமே இல்லை .

நான் பணிப் பெண்ணாக வெளிநாடு போய் உழைத்த சொந்த வீடு வாசல் எனக்கு இருந்ததால்... அது கூட திருத்தம் செய்து,போதுமான வசதிகள் செய்யப்பட்டது.
.
வளர்ந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துவது மிகவும் சிரமமாக இருந்தாலும், ஏதோ ஒரு வகையில் இரு பக்கமும் எந்த பிரச்சனையும் இல்லாமல் சமாளித்து. சமாளித்தே வாழ்க்கை நடத்தினேன்.

ஹாஜியாரும் அவரின் பிள்ளைகள், அவரின் சுகவீனமான மனைவி, தொழில் என போய் விடுவதால் பிரச்சனை ஓரளவு சமாளிக்கப்பட்டே தான் இருந்தது.
எனது பிள்ளைகள் ஓரளவு புரிந்து கொண்டு அதற்கு ஏற்ற மாதிரி வெளியில் சென்று விடுவார்கள்.
ஆனால், வயதுக்கு வந்த எனது அழகிய மகள் ஹாஜியாரின் கண்களுக்கு மகளாகத் தெரியவில்லை.

எனது மகளையும் தனது மகளாக நோக்காமல்... போகப் ,போக தனது ஆசைக்கு பயன்படுத்த முனைந்த போது ..என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.
இதை யாரிடமும் முறையிடவும் முடியாது. முறையிட்டால் மகளுக்கு வரன் தேடுவது எப்படி? ஒருவனின் கையில் பிடித்துக் கொடுப்பது எப்படி?..

எத்தனையோ ஏழைகள் மனைவியின் மகளை... தன்மகளாக நினைத்து சிரமப்பட்டு உழைத்து அவர்களுக்கு உணவு ,உடை வழங்கி அழகிய வாழ்க்கையையும் தேடி கொடுத்து வாழ வைத்துக் கொண்டிருக்கும் போது ....
இந்த வசதி படைத்த மனிதனின் கேவல புத்திக்கு வேறு மருந்து இல்லை. நாம் வாழ்நாள் முழுக்க சிரமப்பட்டாலும் பரவாயில்லை என உடனே எனது திருமண வாழ்வை ரத்து செய்து கொண்டேன்.
கிடைக்கும் சிறு தொழில்களை கொண்டு எனது வாழ்க்கையை கொண்டு போகிறேன்.

எனது மகளையும் ஒரு ஏழை விவசாயிக்கு முடித்துக் கொடுத்தேன்.
அவ நன்றாக இருக்கிறாம்மா" எனக் கூறி முடித்தார்
அந்த வயோதிப மாது.

"சரிம்மா...
பழைய கணக்கு முடித்துவிட்டு இதை கொண்டு போங்கள் "என அவரை கணக்கு முடித்து மிளகாய் தூளை கொடுத்து அனுப்பிய இல்மாவுக்கு எதுவோ புரிந்த மாதிரி இருந்தது...

மிகவும் தைரியமாக இரவு வெட்டி வைத்திருந்த அபாயா துணிகளை தைக்க ஆரம்பித்தாள்.

இன்று அபாயா கடைக்கு கொடுக்க வேண்டிய பத்து அபாயாக்களையும், பெக் பண்ணி அனுப்ப வேண்டும் .

வீட்டு தயாரிப்பான... வாசனை குளியல் சோப் தயாரிப்பிற்கு ஃபார்முலா பொருட்கள் ஆர்டர் பண்ண வேண்டும்.

தோழியின் பிள்ளையின் பிறந்த நாளைக்கு கப் கேக் செய்வதற்கு முட்டை ,பட்டர் ஆர்டர் பண்ண வேண்டும் .

என இன்றைய வேலைகளை மனதில் பட்டியலிட்டவளாக. வெட்டிய துணிகளை தைத்துக்கொண்டிருந்தாள் இல்மா.

"என்னம்மா...
தைக்கத் தொடங்கிட்டீங்களா."
...எனக்
கேட்டு, சிரித்துக்கொண்டே உள்ளே வரும் மகள் ரொனாவின் அழகை வியந்து நோக்கினாள்.

"என்னம்மா.... என்னை விழுங்கிற மாதிரியே பாக்குறீங்க"..... எனக் கேட்டுக் கொண்டே கட்டிப்பிடித்த மகளை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள் இல்மா.

"நீங்க விரும்பிய வாறே மதரசாவும்,பாடசாலைக்கல்வியும் சேர்ந்து படிக்கிற மாதிரியான ஒரு கல்விக்கூடம் புத்தளத்தில் இருக்கிறதாம்.
அங்கே அப்ளிகேசன் அனுப்ப கேட்டிருக்காங்களாம். காலையில் சிகாரா அன்டி பேசினாங்க .
உங்களைப்போலவே உங்க பிரெண்ட், ஸஸ்னாவும் அங்கே ஹாஸ்டல்ல தங்கிப் படிக்க ஆர்வமாக இருக்காவாம்.
போங்க போய்க்குளிச்சிட்டு ,அப்பம் இருக்கு சாப்பிட்டு விட்டு, அங்கே போய் படியுங்க. அப்போதுதான் அப்ளிகேசன் எக்ஸாம் எழுத ஈஸியாக இருக்கும் ."

என்று கூறிய இல்மாவிற்கு சந்தோச முத்தத்தை வாரியிறைத்து விட்டு ஓடினாள் மகள் ரொனா.

இப்போது தெளிந்த மனதுடன் எது வந்தாலும் தைரியமாக எதிர் கொள்ளும் மனநிலையுடன் தையல் மெசினை இயக்கத்தொடங்கினாள் இல்மா.

அங்கே வந்த தாயார் ,மீண்டும் இல்மாவுடன் மெதுவாக கல்யாணப் பேச்சை ஆரம்பித்தார்.
"மகள்...இன்னும் கொஞ்ச நேரத்தில் நாநாமார் அந்த மாப்பிள்ளையைப் பற்றி பேச வருவாங்களேம்மா ..என்ன முடிவு செய்திருக்கீங்க"
எனக்கேட்ட தாயாரைப்பார்த்து ...

முகம் மலர அழகிய புன்னகை சிந்திய இல்மா.. "நானா மாரிடம் நான் பேசிக் கொள்கிறேன். எனக்கான வாழ்வு முடிந்துவிட்டது ம்மா.
எனது மகளின் வாழ்வுதான் இனி என் வாழ்வு."

என உறுதியாக கூறி கூறிவிட்டு தனது வேலையிலேயே கவனத்தை செலுத்தினார் இல்மா

(யாவும் கற்பனை)

**சித்தி மிஸ்ரியா அமீன்**
**கிண்ணியா**

## எங்கள் ஊர்



வெள்ளைக் கரை வைத்துத் தைத்த
கொள்ளையழகு நீலப்பாவாடை
கட்டிய கடல் மங்கை கிழக்கினிலே
பழகிவரும் அழகூரே எம் காத்த மண்ணே...

மேற்கிலே மெதுவாய் அசைந்தாடும் மென்
காற்றோடு சுகமாய்
இசைபாடும்
வாவியின் மெருகில் ஆவியும் மருகும்
ஆசையூரே எம் காத்தமண்ணே...

பலஸ்தீன் பள்ளியின் நகலாக நலமுடன்
மிளிர்ந்திடும் அல்-அக்ஸா
கம்பீரத் தோற்றத்தில்
கண்முன்னே சிம்மமாய் காட்சி பகர்ந்திடும்
காத்த மண்ணே...

முஸ்லிம் மக்களின் பாரம்பரியம்
முற்காலத்துச் சம்பிரதாயம்
எக்காலமும் எடுத்தியம்பும்
நூதனசாலையைத் தாங்கிடும் காத்த
மண்ணே...

அரபு நாட்டில் பிரவேசிக்கும் அனுபவம்
தந்திடும் பேரீச்சை மரங்கள்
பிரதான வீதியில் அரணாக விளங்கிடும்
பிரபல்யமான எம் காத்த மண்ணே...

கஹதான் என்ற வம்சத்தினரின்
வருகையில் உருவான கஹதான் குடி
காத்தான் குடியாய் ஆன வரலாறைக்
காத்திடும் எம் காத்த மண்ணே...

செல்வச் செழிப்பும் சீரான பரக்கத்தும்
சிந்தை அதன் முழுநிறைவும்
சுவர்க்கத்தின் சுகந்தமாய் வார்க்கும்
மகரந்தம் மங்காத எம் காத்த மண்ணே...

வியாபாரிகள் வியாபித்திருக்கும்
கல்விமான்கள் பரந்திருக்கும்
அறிவும் அழகும் செறிந்திருக்கும்
நெறியான எம் காத்த மண்ணே...

பாங்குச் சத்தமும் பயான்கள் நித்தமும்
பாங்குடன் பள்ளிகள் எழுபதையும்
தாண்டியிங்கு பண்பாடு தழைத்தோங்கி
பண்புடன் விளைந்தோங்கும் காத்த
மண்ணே...

முஸ்லிம் மக்களின் தனித்துவ ஊராய்
இஸ்லாத்தின் பாதையில் இனிதாய்ப்
பயணிக்கும்
காத்திரமானது காருண்யமானது
காவியமானதெம் காத்த மண்ணே...

**பஸ்லா பர்ஸான்**
**காத்தான்குடி**




# இஸ்லாத்தில் குழந்தை வளர்ப்பு

எக்காலத்திலும் தனக்கு பெற்றோரோ, வாரிசுகளோ, இணை துணையோ இல்லாத, தூயவனான அல்லாஹ் தனது படைப்பினமான மனிதனுக்கு அளித்த பெருங்கொடைகளில் ஒன்றே குழந்தைச் செல்வமாகும். இச்செல்வம் யாருக்கு வழங்கப்படுகின்றது என்பதை அவனே அல்குர்ஆன் வாயிலாக வெளிப்படுத்தியும் உள்ளான். "வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அவன் நாடியதை படைக்கின்றான். தான் நாடியோருக்கு பெண்(குழந்தை)களை வழங்குகின்றான். நாடியோருக்கு ஆண்( குழந்தை)களை வழங்குகின்றான். அல்லது ஆண்களையும் பெண்களையும் சேர்த்து அவர்களுக்கு வழங்குகின்றான். தான் நாடியோரை மலடாக ஆக்குகின்றான் .அவன் அறிந்தவன். அற்றலுடையவன் ".(அல்குர்ஆன் 42 :49)

எனவே ஆண்டவனின் அருட்கொடையான குழந்தைச் செல்வங்களை பெரும் பாக்கியமாகப் பெற்றவர்கள் அந்த குழந்தைகளை மிகவும் முன்மாதிரியாக வளர்க்க வேண்டும்.

ஒரு தாய் தன் கருவில் குழந்தையை சுமக்கும் காலத்தில் இருந்தே இஸ்லாமிய பண்பாட்டு அம்சங்களோடு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல், அல்குர்ஆன் ஓதுதல், தொழுகை போன்ற இபாதத்களில் ஈடுபடல், நற்காரியங்களில் ஈடுபடுதல் , மகிழ்ச்சியான நேரான



மனப்பாங்குடன் இருத்தல், தன் வயிற்றில் இருக்கும் குழந்தை நல்ல ஸாலிஹான பிள்ளையாக இருக்க பிரார்த்தனை செய்தல் போன்ற நல்ல விடயங்களில் ஈடுபடும் போது குழந்தையும் சிறந்த சாலிஹான குழந்தையாக பிறக்கின்றது.

குழந்தை பிறந்தவுடன் அதன் காதில் பாங்கு இகாமத் சொல்லி ஊதப்படும் வழக்கம் காணப்படுகிறது. இதன் போது முதன்முதலாகவே பிள்ளை இறை நாமத்தை கேட்கின்றது.

அத்தோடு குழந்தை பிறந்ததும் அழகிய பெயர் வைப்பதும் அவசியமாகும் .
"மறுமை நாளில் உங்கள் தந்தையின் பெயருடன் உங்கள் பெயரால் நீங்கள் அழைக்கப்படுவீர்கள். ஆகையால் உங்கள் பெயர்களை நீங்கள் அழகுபடுத்திக் கொள்ளுங்கள் "என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள் (நூல்: அஹமத்)
அழகிய பெயரினால் பிள்ளைகள் அழைக்கப்படும் போதெல்லாம் அவர்கள் வாழ்விலும் அதன் பிரதிபலிப்பு அங்கீகாரம் பெறுகிறது.

குழந்தை பிறந்த ஏழாம்நாளில் அகீகா கொடுப்பதும் பெற்றோரின் கடமையாகும். ஆண் குழந்தையாக இருந்தால் இரண்டு ஆடுகளையும் பெண் குழந்தையாக இருந்தால் ஒரு ஆட்டையும் அறுத்து ஏழை எளியவர் மற்றும் உறவினர்களுக்கு விருந்தளிக்க வேண்டும்

இஸ்லாத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் ஒவ்வொரு படிப்பினை இருக்கின்றது. அவற்றின் தாத்பரியங்களை அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே.

அதுமட்டுமின்றி,ஒவ்வொரு தாயும் தனது குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பூரணமாக பாலூட்ட வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. பாலூட்டுதலின் போது தாய்க்கும் சேய்க்கும் இடையிலான பரஸ்பரம், அன்பு , அன்னியோன்யம் கட்டியெழுப்படுகின்றது . அத்தோடு உளரீதியாகவும் உடல் ரீதியாகவும் குழந்தை வலிமை பெற காரணமாக அமைகின்றது. பிள்ளைக்கும் பெற்றோருக்கும் இடையிலான தாய்க்கும்  சேய்க்கும் இடையிலான நெருக்கம் நேசம் என்பது நிலைத்திருக்கக் காரணமாகவும் அமைகின்றது.

உலகில் உள்ள உயிரினங்கள் அத்தனையும் குழந்தையை பெற்றெடுக்கின்றன . ஆனால் ஏனைய உயிரினங்களுக்கும் மானிட படைப்புகளுக்குமிடையே அனைத்து செயற்பாடுகளிலும் மாறுபாடு காணப்படுகின்றது.

"தாயின் மடியே ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் பள்ளிக்கூடமாக திகழ்கின்றது". எனவே ஒவ்வொரு குழந்தைக்கும் தாயின் மடியில் இருந்தே சிறந்த ஒழுக்கம் , நற்பண்பு , நன் நடத்தை என்பன உருவாக பயிற்சி அளிக்க வேண்டியுள்ளது.

நூலைப் போலவே சேலை அமையும் என்பார்கள்.  பெற்றோர்கள் அனைவரும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியானவர்களாகவும், சிறந்த நற்பண்புகளைப் போதிக்கின்ற ஆசான்களாகவும், அவர்கள் நடவடிக்கைகள் அத்தனையும் கண்காணிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். பெற்றோர்கள் சிறந்த முன்மாதிரியாக அமையும் போது பிள்ளைகள் அந்த முன்மாதிரிகளை கற்று சமூகத்தில் சிறந்த ஒழுக்க சீலர்களாக உருவாகின்றார்கள்

பெற்றோர்கள் தம் பிள்ளைகளில் அன்பு பாசங்களை வெளிப்படுத்தி வளர்க்க வேண்டும்.
அதிகாரத்தினால் ஆணவத்தினால் செயல்படுத்த முடியாத , சாதிக்க முடியாத எந்த காரியங்களையும் அன்பினால் கட்டி யாளமுடியும் .
எனவே பிள்ளைகளுடன் அன்புப் பரிமாற்றங்கள் செய்ய வேண்டும்.
✓கட்டியணைத்தல் .
✓முத்தம் கொடுத்தல்.
✓பாராட்டுதல் .
✓தட்டிக்கொடுத்தல் .
✓தொட்டு அரவணைத்தல் .
✓ஸ்பரிசங்களை பரிமாறுதல்
போன்ற செயல்களை செய்வதன் மூலம் பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையிலான அன்னியோன்யம் கட்டியெழுப்படுகின்றது.எப்போதும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கரிசனையோடு நடத்த வேண்டும்.

அடுத்து குழந்தைகளுக்கு உரிய கல்வி வழங்குவதுடன் இஸ்லாமிய சட்ட திட்டங்கள், தொழுகை போன்ற இதர இபாதத்துகளையும், இஸ்லாமிய கலாசார பண்பாட்டு அம்சங்கள், மற்றும் இஸ்லாமிய வாழ்வியல், வரலாறு என்பவற்றையும் கற்று கொடுக்க வேண்டும் . அத்தோடு சிறுவயதில் அவற்றை நடைமுறைப்படுத்தவும் கற்றுக் கொடுப்பதுடன் அதற்கு வழிகாட்டியாகவும் பெற்றோர்கள் வாழ்ந்து காட்டவேண்டும்.

பிள்ளைகள் அனுபவமற்றவர்கள். தன்னோடு சுற்றியிருக்கும் நட்பு வட்டத்தை மையமாக வைத்தே அனைத்து விடயங்களையும் தீர்மானம் எடுக்கிறார்கள்.எனவே படித்த, அனுபவம் உள்ள பெற்றோர்கள் தான் பிள்ளைகளுக்கான வழிகாட்டிகள். பிள்ளைகளில் எதையும் கட்டாயப்

படுத்தி திணிக்காமல்
முன்னேற்றத்திற்கான
பாதைககளைத் திறந்து காட்டி அந்த
வழியில் நடக்க வழிப்படுத்த
வேண்டும்.

சில வேளைகளில் அதீத அன்பு
ஆபத்தினை விளைவிக்கும். அதிக
அன்பின் காரணமாக பிள்ளைகளை
அவர்கள் பாட்டிலேயே போக
விட்டுவிட்டு இறுதியிலே பிள்ளை
திசை மாறிவிட்டது என்று
வருந்துவதால் எப்பயனும்
ஆகப்போவதில்லை. எனவே
அளவுக்கு அதிகமான அன்பினால்
பிள்ளைகள் வழிதவற பெற்றவர்கள்
காரணமாகி விடக்கூடாது.

இன்றைய நவீன அறிவியல் யுகத்தில்
பிள்ளை வளர்ப்பு என்பது பெரும்
சிக்கலான ஒன்றாக மாறி
இருக்கின்றது. நவீன
தொலைத்தொடர்பு சாதனங்களின்
வரை, பெற்றோர் பிள்ளைகளுக்கு
இடையிலானபிரிவு, தொழில்
ரீதியாக ப பெற்றோர்
பிள்ளைகளுக்கு இடையிலான
இடைவெளிகள் , புரிந்துணர்வின்மை,
நவீன தொ லைத் தொடர்பு
சாதனங்களின் ஆதிக்கம் போன்ற
காரணங்களால் பிள்ளை
பெற்றோர்களுக்கு இடையிலே
பெரும் இடைவெளியும்
நெருக்கமின்மையும் தோன்றியுள்ளது
எம்மால் காண முடிகிறது. எனவே
இந்த இடை வெளியைக் குறைத்து
பெற்றோர்கள் தங்கள்
பிள்ளைகளுக்கிடையில்
அன்னியோன்யத்தை அதிகரிக்க
வேண்டும்.

எந்த நவீன யுகத்தில் என்றாலும்
பெற்றோர் பிள்ளைகள் உறவு மிகவும்
பரிசுத்தமானதாகும். ஒப்புமை காட்ட
முடியாதது. எனவே பெற்றோர்கள்
எக்காலத்தில் என்றாலும் தமது
பிள்ளைகளை வழிநடத்தும்
கடமைபாடுடையவர்களாக
இருக்கின்றார்கள் .எனவே
பிள்ளைகளை வழி நடத்துவதற்கு
ஒரே வழி அவர்களுடன் நட்புறவுடன்
பழகிக் கொள்வதாகும்.
✓சந்தர்ப்பம் கிடைக்கும்
போதெல்லாம் அவர்களுடன் கூடி
உண்ணுதல்,
✓கூடி விளையாடுதல்,
✓ உறவினர் வீடுகளுக்கு அழைத்துச்
செல்லுதல்,
✓குடும்ப அங்கத்தவருடன்
கலந்துரையாட நேரம் ஒதுக்குதல்,
✓கூட்டாக பயணம் செய்தல்,
✓பிள்ளைகளுடன் மனம் விட்டு
பேசுதல்,
✓பிள்ளைகள் பெற்றோர்கள்
பிரச்சினைகளை எதிர் நோக்கும்
போது அவற்றை கலந்துரையாடி
தீர்வுகளை பெற்றுக் கொள்ளுதல்,
✓வீட்டிலே இருக்கின்ற
சந்தர்ப்பங்களில் கைபேசி கணினி
போன்ற விடயங்களுக்கு நேரம்
ஒதுக்குவதை தவிர்த்து அன்பினை
பரிமாற நேரம் ஒதுக்குதல்.
✓ பிரச்சினைகளை எதிர்கொள்ளல்
அவற்றில் இருந்து விடுபடல்,
பிரச்சினைகளை கையாளல்,
ஆலோசனை பெறல்
போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும்
போது பெற்றோர் பிள்ளைகளுக்கு
இடையிலான நெருக்கம் அதிகரித்து
பிள்ளைகளை மிகவும் சிறப்பாக வழி
நடத்துவதற்கு பெற்றோர்களுக்கு
அவகாசம் கிடைக்கிறது

அத்தோடு நின்று விடாமல்
பிள்ளைகள் பருவ வயதை
அடைந்ததும் அவர்களுக்கு
திருமணம் செய்து வைப்பதும்
பெற்றோர்களின் கடமையாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் குழந்தை
வளர்ப்புக்கு முன்னுரிமை
வழங்கப்பட்டுள்ளது.குழந்தைகளை
எவ்வாறு வளர்க்க வேண்டும்?.
எவ்வாறு வளர்க்கக் கூடாது
என்பதற்கான ஆதாரங்கள்
அல்குர்ஆனில்
எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆதம்
(அலை) அவர்களின் பிள்ளைகள்,
நூஹ் நபியின் மகன், இப்றாஹீம்
(அலை) , இஸ்மாயீல் (அலை) யஃகூப்
(அலை), யூசுப் ( அலை) என்று பல




நபிமார்கள் பற்றி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதித் தூதர் முஹம்மது ( ஸல்) அவர்கள் தமது பிள்ளைகள், பேரப் பிள்ளைகளான ஹஸன்( றழி) ஹுசைன் ( றழி) வளர்ப்புப் பிள்ளை மற்றும் ஏனைய சிறுவர்களோடு நடந்து கொண்ட முறை என்பன எவ்வாறு குழந்தைகளை வளர்க்க வேண்டும், எவ்வாறு குழந்தைகளை கையாள வேண்டும் என்று கற்றுத் தரும் படிப்பினைகளாக இருக்கிறது.

லுக்மான் (அலை) தனது மகனுக்கு கூறிய அறிவுரைகளை ஸூறா லுகமான் சிலாகித்துக் கூறுகிறது. பிள்ளைகளை எவ்வாறு அழைக்க வேண்டும். அவர்களுக்கு எவ்வாறு உபதேசிக்க வேண்டும் என்பதை அல் - குர்ஆன் போதனை செய்கிறது. இப்றாஹீம் அலை தன் மகன் இஸ்மாயீல் அலை அவர்களிடம் ஆலோசனை கேட்டது முதல் பிள்ளைகள் பெற்றோருக்கு எவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதையும் குர்ஆன் கற்றுத் தந்திருக்கிறது.

உலகில் எந்தவொரு சமயத்திலும் காணப்படாத வகையில் இஸ்லாம் குழந்தை வளர்ப்பில் கரிசனை காட்டியுள்ளது.இந்த வழியினைப் பின்பற்றி வளர்க்கப்படும் எந்தக் குழந்தையும் வழிதவறிப் போகாது என்பதுடன் தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரையும் முதியோர் இல்லத்தில் கொண்டு சேர்க்க மனதிலும் நினைத்து விடாதுஎன்பதும் யதார்த்தபூர்வமான உண்மையாகும்.

எனவே இஸ்லாம் காட்டித் தந்த வழிமுறைகளைக் கற்றுத் தேர்ந்து அதன் வழியே பிளைகளை வளர்க்க முன் வர வேண்டும். அல்லாஹ்வின் மார்க்கத்தின் வழியில் நடப்பதால் யாரும் தவறிப் போகவும், திசைமாறிப் பயணிக்கவும் வாய்ப்பில்லை.

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
**காத்தான்குடி.**

# பெண்ணின் பெருமை.



பலரும் அறியா
பல்லாண்டுகள் முன்னே
பரவியிருந்தது பெண்ணடிமை,

ஆன்மா உண்ட? அவளுக்கு
ஆண்களைப் போன்றென்றா?,அது
என்ற,

விதண்டாவாதங்கள் நாளும்
விவாதிக்கப்பட்டது..., நீண்டகாலமாக,

பெண்ணும் பெயரளவில்
பொருள் போன்றே வழக்கிலிருந்தாள்,

பெண்குழந்தை சாபமென்றதால்
அவர்களை
பொறுப்பேற்றன புதைகுழிகள்.

துயரம் துடைக்க பலமின்றி நாளும்
துவளும் நாளிகை தொடர்ந்தது
அவளுக்கு,

பின்னைய நாட்களில்
பூவுலகம் வந்தனர் பல பொக்கிஷங்கள்.

மாதராக பிறப்பதே மாதவம்,
மாதர் பாதங்களிலே சொர்க்கம் என
உரத்தொலித்தனர்.

பெண் சார்பின்றி இவ்வுலகில்
பெருமையுமில்லை , என்றும்

போற்றாதவர்க்கு அவளால்
பேரின்பமுமில்லை என்பதும்
வழக்கானது. அதுவே அவளுக்கு
வாழ்வானது.

அத்தனையும் உடைத்தெறிந்தாள்
அகிலத்தையும் ஆள முன்வந்தாள்
அன்போடு.

கணவன், பிள்ளைகளை பராமரித்து
காரியங்களையும் கையாண்டாள்
கச்சிதமாக.

தன் ஒவ்வொரு பாத்திரங்களும்

பங்கும்
தனித்துவமானதென்றும்,

ஊன்றுகோலான உறவும்

நானென்று
உணர வைத்தாள் உலகத்தார்க்கு.

எடுத்து வைக்கும் காலடிகளெல்லாம்
பதியவைக்கும்
எடுத்துக் காட்டுகளாக பதியப்பட்டன.

தொழில்வாண்மைத் துறைகளில்
ஊக்கம் கொண்டு
தொடரான தடம் பதித்தாள்.

இருபாலாகத்தானே படைத்தான்
இறைவன் பாரினில் எம்மை
பல்கிப்பெருக,

பால்நிலை வேறுபாட்டை விதைத்தவர்
யாரோ?
பல்சமூகத்தில் இன்று.

ஆணாதிக்கமும் அவசியமில்லை
பெண்ணிலைவாதமும்
பொருத்தமில்லை எவர்க்கும்.

இணைந்து நின்று
இயங்காதபோது ஏற்றமென்பது
இல்லை என்பேன் இவ்வுலகில்.

தொலைந்து போகும் நாட்களில்
நாளும்
தொல்லைகள் பல பெற்றாலும்,

பல தடைகளை உடைத்து
ஆளுமையில்
பலமான விடைகாணவே , புறப்பட்டு

தன் இருப்பை நாளும்
தரணியில்
தக்கவைத்துகொண்டிருக்கிறாள்..
இன்றுவரை...

**இம்திஸாஹஸன்**
**மருதமுனை**

## தேனீ வளர்ப்பு/ Bee keeping /Apiculture



மனிதர்கள் தேனீக்களின் சமூகத்தை, செயற்கையாக தயாரிக்கப்படும் கூடுகளில் வளர்த்து, அவற்றைப் பராமரிக்கும் செயற்பாட்டையே தேனீ வளர்ப்பு (apiculture) என்று குறிப்பிடுகிறோம். விவசாயிகள், தமது கூடுதல் வருமானத்திற்கு, விவசாயம் சார்ந்த தேனீ வளர்ப்பைக் கையாளலாம்.

8000 ஆண்டுகளுக்கு முன்பபிருந்தே தேன் எடுப்பவர்கள் மரத்திலிருந்தும்,மரப் பொந்துகளிலிருந்தும் ,
குகைகளிலிருந்தும் தேனை சேகரித்தனர். பிற்காலங்களில்
கூட்டில் தேனீ க்களை வளர்த்து வளர்க்கப்படும் தேனீக்களில் இருந்து தேனை பெற்றனர்.

வளர்க்கப்படும் தேனீக்கள் தாமாகவே வெளியே சென்று, மலர்த்தேனை சேகரித்து, தேனாக மாற்றி, அதை தேன் கூட்டில் சேமிக்கும்.

கூட்டில் வளர்க்காமலே தேனை காட்டிலிருந்து சேகரிக்கும் வழக்கம் நீண்ட காலமாக உண்டு. ஏனெனில் தேனின் மருத்துவ அனுகூலங்கள், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களின் பயன்பாடுகள் அதிகரித்து வருவதால், தேனீ வளர்ப்பு ஒரு தொழிலாக முக்கியமடைந்துள்ளது. தேனீ வளர்ப்பில், தேன் மற்றும் மெழுகு, முக்கியமான வெளியீட்டுப் பொருட்கள் ஆகும்.

தேனீ வளர்ப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

தேனீ வளர்ப்பு தேனீ முற்றம் என்றும் அழைக்கப்படுகிறது. தேனீக்களின் தேனீக்கள் வைக்கப்படும் இடம் என்பவற்றுக்கு ஏற்பவே இவ்வாறு அழைக்கப்படுகிறது. தேனீக்கள் பல அளவுகளில் வருகின்றன மற்றும் தேன் உற்பத்தி செயல்பாட்டைப் பொறுத்து கிராம புறமாகவோ அல்லது நகர் புறமாகவோ இருக்கலாம்.

# தேனீக்களின் முக்கியத்துவம்:

*தேனீக்கள் இல்லையெனில், பல தாவரங்களில் அயல் மகரந்தச் சேர்க்கை நின்று, அந்தத் தாவர இனம் அழியக் கூடும்.
* மகரந்தச் சேர்க்கை இல்லாமல் போவதால், பல தாவரங்களின், காய், கனிகள் மக்களுக்கு இராமல் போகலாம்.
* இதனால் பலதரப்பட்ட உணவு கிட்டுதல் அரிதாகலாம். தேனின் மருத்துவ குணம் நாம் அறிந்ததே.

# தேனீ வளர்ப்பின் சிறப்பம்சங்கள்:

வருமானம் ஈட்டும் செயலான தேனீ வளர்ப்பின், சிறப்பம்சங்களாவன

1.தேனீ வளர்ப்பிற்கு, குறைந்த நேரம், பணம் மற்றும் கட்டமைப்பு மூலதனமே தேவைப்படும்.

2.குறைந்த மதிப்புள்ள விவசாய நிலங்களில், தேன் மற்றும் மெழுகினை தயாரிப்பது இலகு.

3.தேனீ வளர்ப்பு, வேறு எந்த விவசாய செயலுக்கான வளங்களூடாகவே கையாளப்படக் கூடியதாக இருக்கும். உதாரணமாக வீட்டுத் தோட்டச் செய்கை,பழம் பயிர்ச் செய்கை,அலங்கார தாவர வளர்ப்பு,நிலவலங்காரங்கள், மரக்கறிச் செய்கை,தென்னை செய்கை,கமுகுச் செய்கை

4.தேனீ வளர்ப்பதால் தென்னை, கமுகு தோப்புகளில் 30 சதவிகிதம் விளைச்சலும், பிற விவசாயங்களில் 20 சதவிகிதம் விளைச்சலும் கூடுதலாகின்றன.

# இனப் பாகுபாடு:

தேனீ சமுதாயத்தில் இனப்பாகுபாடு பணி பங்கீட்டின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது.

ஆண் தேனீ கருவுற்ற முட்டைகளிலிருந்து பெண் தேனீக்களையும், கருவுறாத முட்டைகளிலிருந்து ஆண் தேனீக்களையும் உண்டாக்குகின்றது. அரசப்பசையை மட்டும் உணவாகப் பெறும், தனியே வளர்க்கப்படும் பெண் தேனீ, இராணித் தேனீயாக மாறுகிறது. குறைந்த அளவு அரசப்பசையைக் கொடுத்து வளர்க்கப்படும் தேனீக்கள் முறையே ஆண், பெண் தேனீக்களாக மாறுகின்றன. மற்ற பெண் தேனீக்கள் இராணித் தேனீயின் தாடைப் பகுதியில் சுரக்கப்படும் ஒரு சுரப்பிப் பொருள் உணவாகக் கொடுக்கப்படுவதால் மலட்டுத்தன்மை அடைந்து பணித் தேனீக்களாக மாறுகின்றன.

# தேனீக்களின் வகைகள் :
03 வகைப்படும்.
1.இராணித் தேனீ/Queen
2.வேலையாட் தேனீ/Worker bees
3.ஆண் தேனீ/Drone

01.இராணித் தேனீ/ Queen:

* இது உருவத்தில் பெரியது.
* ஒரு தேனீ சமுதாயத்தில் ஒரு இராணி மாத்திரமே காணப்படும்.
*. இதுவே வேலையாள் தேனீக்களையும் , ஆண் தேனீக்களையும் உருவாக்கும். இது தாயாக இருக்கும்.
* தேனீக்கள் கூட்டத்திற்குத் தலைவி.
* இதற்கு முட்டையிடுதலே பணி.
*  இந்த இராணித் தேனீ அடையின் கீழ்புறம் கட்டப்படும்.
*  சிற்றறைகளில் வளர்க்கப்படும்.
*  இராணித் தேனீ இடும் முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுவிற்குத் தொடர்ந்து 16 நாட்கள் அரசப்பசை எனும் இராயல் ஜெல்லி(Royal jelly) என்னும் அரசப்பசையை உணவாகக் கொடுத்தால் அவை இராணித் தேனீக்களாக வளர்கின்றன.

* ஒரு இராணி தேனீயின் வாழ்க்கை காலம் மூன்றிலிருந்து நான்கு ஆண்டுகள்.
* இ ராணி தேனீயின் முக்கியமான வேலை சந்ததிகளை உருவாக்குவது.
*  ஒரு நாளில் ராணி தேனீ 2000 முட்டைகள் வரை இடுகிறது. மூன்று சூழ்நிலைகளில் ஒரு தேன் கூட்டில் புதிய இராணி உருவாக்கப்படும்.
* தேன் கூட்டில் ஒரு புதிய இராணி தேவை எனும் போது/பழைய இராணி நோய் காரணமாக இறக்கும் போது/பழைய இராணி எதிர்பாரா விதமாக இறக்கும் போது/பழைய இராணியின்  ஓமோன் சுரப்பு குறையும் போது /திரளப் பறத்தல்( Swarming/Absconding) போன்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே புதிய இராணி தேனீ உருவாக்கப்படும்.
* இராணித் தேனீயினால் Queen substance எனும் ஒரு வகையான ஓமோன் சுரக்கப்படும்.இதனாலேயே வேலையாள் தேனீக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

02.ஆண் தேனீ/ Drone:

* இது கூட்டின் சூட்டைப் பராமரித்தல்.
*  இராணித் தேனீயைக் கருவுறச் செய்தல் போன்ற முக்கியப் பணிகளை செய்கிறது.
* நலிவான/ கருக்கட்டப்படாத முட்டையிலிருந்து( Unfertilised egg) உருவாகும்.
* பல்லாயிரக்கணக்கான ஆண் தேனீக்கள் உள்ள போதும் ஒரு ஆண் தேனீக்கே இராணியுடன் இணையும் வாய்ப்பு கிடைக்கும்.
* இணைந்த உடனேயே ஆண் தேனீ இறக்கும்.
* ஒரு ஆண் தேனீயை கவனிக்க 5 - 6 வேலையாள் தேனீக்கள் தேவைப்படும்.
* அளவில் பெரிய அறுங்கோண அறைகளில் இடப்படும் முட்டைகளிலிருந்து பொரிக்கும் புழுக்கள் முதல் 3 நாட்கள் அரசப்பசை எனும் இராயல் ஜெல்லி என்னும் அரசப்பசை உணவும் கடைசி 4 நாட்கள் மகரந்த உணவும் கொடுக்கப்பட்டு 24 நாட்களில் முழு வளர்ச்சி அடையும். இதன் ஆயுட்காலம் 60 நாட்கள்.
* ஒரு தேனீ சமுதாயத்தில் 10 % ஆண் தேனீக்கள் காணப்படும்.
* இவற்றை இராணியுடன்  கலக்க வைப்பதற்காக கூட்டினுள் வேலையாள் தேனீக்கள் வைத்திருந்தாலும் குளிர் காலங்களுக்கு முன்பாக  அதிக உணவு வழங்க வேண்டும் என்பதற்காக விரட்டி விடுகின்றன.இதன் மூலம் கொல்கின்றன.கொல்வதற்கு கொளுக்கினை ( Stinge)பாவிப்பதில்லை.
*  இவை அதிக அளவில் ரீங்காரமிடும்.
* இவற்றின் இனக் கலப்பு திட்டமிட்ட ஒரு ஒழுங்கிலேயே இடம் பெறும்.இதற்காககூடுகளில் இருந்து

இனக் கலப்புக்காக பொதுவான ஒரு இடத்திற்கு பறந்து செல்லும்.
* இக்காலப் பகுதியை Drone flight time என்போம்.இது இலங்கை காலநிலையில் மாலை 03.00 - 05.15 வரையாகும்.
* இவை கூடி நிற்கின்ற இடமானது Drone congregation area என அழைக்கப்படும்.
* ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள ஆண் தேனீக்களும் இவ்விடத்தில் கூடிநின்று இராணியின் வருகைக்காக காத்து நிற்கும்.
* புதிதாக உருவாக்கப்பட்ட இராணியானது வேலையாள் தேனீக்களால் Drone congregation பகுதிக்கு அழைத்து வரப்பட்டும்.
* இப்பகுதியிலேயே பறந்த நிலையில் இனக் கலப்பு மேற்கொள்ளப்படும்.
* உள்ளக கலப்பை தவிர்க்கும் முகமாகவே இவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது.

03.வேலையாள் தேனீ/பணித் தேனீ/ Worker Bees:

* ஒரு தரமான தேன் கூடு உருவாக்கத்தில் வேலைக்கார தேனீயின் பங்கு முக்கியமானது.
* இவை அதிகளவில் ஒரு கூட்டில் காணப்படுமாயின் அது சுறுசுறுப்பான கூடாக காணப்படும்.
* பிறந்தது முதல் இறக்கும் வரை வேலை செய்து கொண்டே இருக்கும்.
* வேலைக்கார தேனீக்கள் அனைத்தும் பெண் தேனீக்கள் ஆகும்.
* இனம் பெருக்க முடியாததும் ஆண் தேனீக்களை விட சிறியதாகவும் காணப்படும்.
* * இவைகளுக்கு தேன் சேகரிக்கவும், மெழுகைச் சுரக்கவும், அரசப்பசையைச் சுரக்கவும், மகரந்தத்தினை எடுத்து வர, பொருட்களைப் பற்றி வர என பல பணிகளுக்கான உறுப்புகள் உள்ளன.
* இவற்றின் விசேட உருவவியல் இயல்புகளாக வயிற்றுப் புறத்தில் மெழுகு சுரப்பிகளும் பின்னங் கால்களில் மகரந்த மணிகளை காவுவதற்காக மகரந்த கூடை ( Pollen Basket ) எனப்படும் அமைப்பும் குத்துவதற்கு கொடுக்கும்(Sting) காணப்படும்.
* இவற்றின் தலையில் காணப்படும் கபச் சுரப்பி (Hypopharyngeal gland) இனால் ( றோயல் ஜெலி ( Royal Jelly) சுரக்கப்படுகிறது.
* வயிற்றறையின் 4,5,6,7ம் துண்டங்களில் மெழுகுச் சுரப்பியும் 10 வது துண்டத்தில் கொடுக்கும் (Sting) காணப்படுகிறது.
* பணித் தேனீக்கள் முழு வளர்ச்சி பெறாத தேனீக்கள்.
* இவைகளால் சினைப் பைகள் வளர்ச்சி பெறாததால் இவை முட்டையிடும் தகுதியடைவதில்ல.
* பணித் தேனீக்கள் அளவில் சிறிய அறைகளில் இடப்படும் முட்டைகளிலிருந்து உருவாகின்றன.
* முதல் ஒரு நாள் அரசப்பசை எனும் இராயல் ஜெல்லியும், இறுதியில் 3 நாட்கள் மகரந்த உணவும் கொடுக்கப்பட்டு 21 நாட்களில் வளர்கின்றன.
* இதன் ஆயுட்காலம் 42 நாட்கள்.
* ஒரு தேனீ சமுதாயத்தில் 10000 - 40000 வரை காணப்படும்.
* இவைகள்தான் அடைகளைக் கூட்டுதல், பராமரித்தல், தேன் இருக்குமிடம் அறிதல், தேன் சேகரித்தல் அவைகளை அடைகளில் பதனம் செய்தல், புழுக்களுக்கு உணவு கொடுத்தல்,வதை கட்டுதல், கூட்டினுள் காற்றோட்டம் ஏற்படுத்துதல், கூட்டினைப் பாதுகாத்தல்,உணவை கூட்டினுள் கொண்டு வருதல் போன்ற பல பணிகளைச் செய்கின்றன.

# தேனீ வளர்ப்பிற்கான உபகரணங்கள்:

நவீன முறையில் தேனீ வளர்ப்பினை மேற்கொள்ளும் ஒருவருக்கு பல உபகரணங்கள் தேவைப்படுகின்றன.அதாவது,
01. தேனீப் பெட்டி ( Bee box)
02.புகையூட்டி ( Smoker)
03.தேனீக்களை கொண்டு செல்லும் பெட்டி(Box for transporting bees)
04.தேன் பிரித்தெடுக்கும் கருவி(Honey Extractor)

# தேனீ பெட்டி/ Bee Box:

தேனீ பெட்டிகளை பாவிப்பதன் மூலம் தேனீ வளர்ப்பு மிகவும் இலகுவாக அமைகின்றது.
தேனீக்கள் வாழும் சூழலையும் அதன் வாழ்க்கை முறையையும் அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட தேனீ பெட்டிகள் விவசாய திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ளன.அவற்றின் பகுதிகளாவன,
* அடித்தட்டு / தளப் பலகை( Floor board)
* வதைப் பெட்டி(Honey super)
* மேற் பெட்டி( Breed box/ Brood chamber)
* சிகைப் பலகை(Crown board)

* வதைப் பெட்டிச் சட்டம் (Honey frame)
* மேற் பெட்டிச் சட்டம் (Brood box frame)
* வாயில் தகடு(Queen guard)
* கூரை(Roof)

தேனீ கூட்டினை வடிவமைக்கும் போது இயற்கையான கூட்டில் காணப்படும் சில அம்சங்கள் செயற்கையான கூட்டிலும் வழங்கப்பட வேண்டும்.
அவையாவன
* தேனீக்கான இடம்/Bee space
* வதைத் தடிப்பு (Comb thickness)
* வதை இடைவெளி/Comb spacing
மேலும் ஒரு தேனீ பெட்டியில் 02 செயற்பாட்டு பகுதிகள் காணப்படும்.
* குஞ்சு காக்கும் அறை
* தேன் சேர்க்கும் அறை

# பாதுகாப்பு:

தேன் பெட்டிகளை மிகுந்த பாதுகாப்புடன் வைக்க வேண்டும்,.

வனம், மலைப்பகுதிகளில் தேனீ வளர்ப்பவர்கள் கரடியிடமிருந்து பாதுகாக்க வேண்டும்.
எறும்புகள், பூச்சிகள் தேனீ வளர்ப்புப் பெட்டிகளுக்கு வந்து விடாமல் பெட்டியைச் சுற்றிலும் பூச்சி மருந்துகளைத் தடவி வைக்க வேண்டும். தேன் கிடைக்காத காலங்களில் சர்க்கரையைக் காய்ச்சி சிரட்டைகளில் ஊற்றிப் பெட்டியினுள் வைக்க வேண்டும்.(இது குறித்து தகுந்த வல்லுனர்களிடம் பயிற்சி பெறுதல் நல்லது)

# தேனீக் கூட்டங்கள் பெறுதல்:



இயற்கையாக காடுகளிலும், பொந்துகளிலும், இடுக்குகளிலும் இருப்பவைகளைப் பிடித்தும் அல்லது தேனீ வளர்த்து வருபவர்களிடம் பெற்றும் தேனீக்களைக் கூட்டமாகப் பெற்றும் வளர்க்கலாம். தேனீக்கள் இடம் மாற்றம் செய்வதில் இரவு நேரங்களையேப் பயன்படுத்த வேண்டும்.

# தேன் எடுத்தல்:

தேனீ வளர்ப்புப் பெட்டிகளில் தினமும் ஈக்கள் வந்து செல்வதைக் கவனிக்க வேண்டும். அவைகளில் தேன் சேர்ந்து உள்ளதைக் கவனித்து அடைகள் அனைத்தும் அல்லது 80 சதவிகிதம் மூடிய பின்பு தேன் எடுக்க வேண்டும். தேன், அறைகளில் பதனமாகும் முன்னர் எடுத்தால் அத்தேன் விரைவில் கெட்டு விடும். அடைகளில் உள்ள அடைப்புகளை அதற்கான உள்ள கத்திகளைக் கொண்டு எடுத்துவிட்டு தேன் எடுக்கும் இயந்திரத்தினைக் கொண்டு(Honey Extractor) சுழற்றுவதன் மூலம் தேனை எடுக்கலாம். தேன் பூச்சிகளை மயக்கநிலை அடைய புகையை அதிக அளவில் உபயோகிக்கக் கூடாது.

# தேனனீ பூச்சி கடித்தால் என்ன செய்ய வேண்டும்?

தேனீ,குளவி கொட்டியதால் ஏற்படும் வலி, வீக்கம் எல்லாம் சிறிது நேரத்தில் சரியாகி விடும். சில பேருக்கு மட்டும் ஒவ்வாமை ஏற்பட்டு நாள் கணக்கில் வலி,வீக்கப்அரிப்பு இருக்கும். அப்படி இருந்தால் மருத்துவரை அணுகலாம். அதேபோல இம்மாதிரி ஒவ்வாமை உள்ளவர்களை நூற்றுக்கணக்கான தேனீக்கள் ஒன்றாகக் கொட்டினால் உயிருக்கு ஆபத்து வரும்.

இவ்வாறு வெற்றிகரமாக தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு மனைப பொருளாதாரத்தில் மகளிரின் பங்களிப்பினையும் வழங்குவோம்.

**எம்.எச்.முர்ஷிதா ஷிரீன்.**
**விவசாயப் போதனாசிரியை**
**சம்மாந்துறை**

# மொழிபெயர்ப்பு கவிதை.

## Enough for me these...!



Enough food to
keep me alive
Decent wears to
keep my pride
A peaceful sleep
when I'm drained
A dignified life to
walk upright
Is enough to keep me satisfied...!

A millionaire's dream ever
I've dreamt it never
Except for a goodnight sleep
My hands are raised for others...!

Allying with Philanthropists out there
Poor and needy I'd care
Enough alone is the peace of mind
Nothing more I felt inclined ...!

Beyond this,
A pen to write
Good books to read
Nice memories to cherish
A life partner so precious ...
Enough to complete my life
In the interim world of this kind...!

**(A Tamil poem by Sammanthurai Mashoora )**

**Translated by Mareena Ilyas Shafee**

## இவை போதுமெனக்கு.

பசிக்கு உண்ண போதுமான உண
உடுத்துக் கொள்ள;
அவசியமான ஆடைகள்.
சமூகத்தில்,
தலை நிமிர்ந்து நடமாட,
தேவையான அந்தஸ்து.
படுக்கையில் விழுந்ததும்,
மெய்மறந்து அயரும் தூக்கம்,
அது போதுமெனக்கு.

கோடீஸ்வரியாகும் கனவுகள்,
கொஞ்சமும் இருந்ததில்லை.
சுகமான தூக்கத்தைத் தவிர,
இறைவனிடம் கேட்டதெல்லாம்,
அடுத்தவர்க்கானதுதான்.

வாழ்வாதாரப் பிடிமானமின்றி,
மகிழ்ச்சியிழந்து,
தவிக்கும் ஏதிலிகளை,
வள்ளல்களிடம்கைகாட்டி விட்டு,
உபகாரம் செய்விக்கும்,
உளத்திருப்தியொன்றே போதும்.

அதற்கப்பால் இலக்கியத்துடனான
இடையறாப் பயணம்,
ஓய்வினைக்கழிக்க ஒரு பேனா,
வாசிக்க நல்ல புத்தகங்கள்,
கொறிக்க,
கடந்தகால ஞாபகங்கள்,
உள்ளவரை கூடவே வரும் துணை,
என் வாழ்வைப் பூரணப்படுத்த,
இவை போதுமெனக்கு,
நிரந்தரமற்ற இவ்வுலகில்.

**சம்மாந்துறை மஷூறா.**

## குறிப்பு


**கட்டுரை ஆக்கங்கள் மூன்று பக்கம் தாண்டாமல்.(800 சொற்கள்.)**
**சிறு கதை ஆக்கங்கங்கள் நான்கு பக்கம் தாண்டாமல்**
**(900 சொற்கள்.)**
**கவிதை ஒருபக்கம் தாண்டாமல்**
**எழுதியனுப்பலாம்.பக்க நிர்ணயம் கருதி நீண்ட ஆக்கங்களை திருத்த நிர்வாக மற்றும் இதழ் ஆசிரியர்களுக்கு உரிமையுண்டு.**
**நிர்வாக ஆசிரியர்.**
**0770696559**

# 2023/2024 விழித்தெழு சர்வதேச விருது பெற்ற பென் கிளப் ஆளுமைகள்










































ISSN 2961-5194
9 772961 519006